

# ரமணோதயம்

ஏப்ரல் 2019
காலாண்டு

ஆராதனை இதழ்
விலை ₹ 20

om namo BHagavathe sri Ramanaya

# BHAGAVAN SRI RAMANA MAHARSHI



# 69th Aradhana Celebration

RAMANA KENDRA TRUST
41, Alarmelu Mangapuram, Mylapore, Chennai 600 004, Phone : 2461 1397
Cell : 99404 18375, Email : ramanakendrachennai@gmail.com

## ARADHANA CELEBRATION

### Thursday, 2nd May 2019

| | | |
|---|---|---|
| **MORNING** | 6.00 a.m. | : நாதஸ்வரம் |
| | 7.00 a.m. | : Mahanyasam, EkadasaRudrajapam, Abhishekam |
| | 10.00 a.m. | : Sri Ramana Sahasranamam Archana |
| | 11.00 a.m. | : Tamil Parayanam: "உள்ளது நாற்பது, அக்ஷரமணமாலை," |
| | 12.15 p.m. | : Annadanam, Deeparadhana |
| **Evening** | 4.00 p.m. | : ப்ரதோஷ பூஜை |
| | 5.20 p.m. | : Dr.N. BHairavi, Ramana Music |
| | 6.45 p.m. | : 'Thiru Veedhi Ula' of Sri Bhagavan around Mada Veedhies, Mylapore |
| | 7.15 p.m. | : "Aksharamanamalai" - Group chanting |
| | 8.47 p.m. | : Merger of Sri Bhagavan in Arunchala - (ஆன்மாவாம் அருணாசலனோடு அண்ணல் ரமணர் ஒடுங்கிய தருணம்) |

(Donations towards Annadhanam (Rs. 40,000) Ekadasa Rudrajapam (Rs,8000), Flowers to Bhagavan and decorations (Rs,10000/-) Rathayathra (Rs.25000/-) Pandal, Lighting (Rs.10000/-) are gratefully accepted in part or in full. Donations are exempt u/s 80G of IT Act, Cheques / drafts may be drawn in favour of Ramana Kendra Trust.
(Laksharchana : From to )

உதயம் 18 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்

ஏப்ரல் 2019

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:

ஆ. குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2019


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | 14 |
| 3 | எல்லா மைலார்ட் வி. நிரஞ்சன் | 24 |
| 4 | ஔவைக் குறள் | 34 |
| 5 | இனிவரும் திருநாட்கள் | 36 |
| 6 | அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம் - பகுதி 14 டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 37 |
| 7 | புகழுடன் ஓங்கி நிற்பார் பேராசிரியர் சுவாமிநாதன் டாக்டர் எஸ். ராம் மோஹன் | 51 |
| 8 | ரமண மையங்களை நோக்கி தொடர் கட்டுரை | 58 |
| 9 | ரமணாயனம் க்ரேஸி மோஹன் | 68 |
| 10 | செய்திகள் | 74 |

# ஆசிரியர் உரை

## மெத்தக் கடினமா? அதி சுலபமா?

பகவானது உபதேசங்களில் முக்கியமான ஒன்று "நீங்கள் ஏன் தேச சேவையில் ஈடுபடக் கூடாது?" என்று வினவிய தேச பக்தர்கட்குத் தந்த ஆணித்தரமான பதில்: "உன்னையே நீ அறிந்துகொள். அதுவே நீ செய்யக்கூடிய மிகச் சிறந்த சேவை. அவ்வறிவு பெற்றபின் எல்லாமே அடையப்பெறும்" என்னும் விடை. எனவே நாம் எதை நாடி முயற்சிக்க வேண்டும் என்று தெரிகிறது அல்லவா!

பர்த்ருஹரி மிக அழகாக வழிகாட்டுகிறார்.

பரேஷாம் சேதாம்ஸி ப்ரதிதிவஸ மாராத்ய பஹுதா
ப்ரஸாதம் கிம் நேதும் விசயி ஹ்ருதய க்லேஸ கலிதம்
ப்ரயந்நே த்வய்யந்த: ஸ்வயமுதித சிந்தாமணி கணோ
விவிக்த: ஸங்கல்ப: கிம்பிலஷிதம் புஷ்யதி ந தே

"மனஸே! வெவ்வேறு வழிகளில் முயன்று பிறரை மகிழ்விக்கும் மனமே, நீ இறுதியில் அடைந்த பலன் என்ன? உன்னையே நீ விசாரம் செய்து, 'நான் யார்' என்று பிரஸன்னமாக உணர்ந்தால், வேண்டியதை எல்லாம் உடனே தரும் தேவலோக சிந்தாமணியாக நீ ஆகிவிட மாட்டாயா?" என்கிறார் பர்த்ருஹரி.

தன்னை உணர்ந்தவனுக்கு எல்லாமே கை வசந்தான். தனக்காக ஒரு பசுமாடு கூடப் பெறமுடியாத விஸ்வாமித்ரனுக்கு, வேறு ஒரு இந்திரனையும் தேவலோகத்தையும் சிருஷ்டிக்கும் பயம்

எங்கிருந்து வந்தது? பல அலைகள் ஓய்ந்து, மனம் இதயத்தில் ஒன்றும்போது அளவற்ற ஆன்மிக சக்தி உருவானபின்தான்.

*"அகமுகமார் அந்த அமல மதிதன்னால்*
*அகம்இதுதான் எங்குஎழும் என்று ஆய்ந்தே – அகவுருவை*
*நன்குஅறிந்து முந்நீர் நதிபோலும் ஒயுமே*
*உன்கண் அருணாசலனே ஓர்*

*(அருணாசல பஞ்சரத்னம்)*

பொருள்: உள்முகமாக்கப்பட்ட பரிசுத்தமான விசார அறிவினால் 'நான் என்னும் இந்த உணர்வு எங்கிருந்து எழுகின்றது என்று ஆய்ந்து உண்மையான தன் ஆத்ம ஸ்வரூபத்தை நன்றாக உணர்பவன் கடலில் நதிபோல், அருணாசலனே, உன்னில் ஒன்றாகக் கரைந்து விடுவான்."

அங்ஙனம் செயல் இழந்து அலை ஓய்ந்த கடல் போல் சலனமற்று, இயக்கமற்றுக் காணப்படினும் உண்மையில் அந்த ஞானியே 'மஹா கர்த்தா'. அதேசமயம் 'மனத்தின் இயக்கம் அற்று இருப்பதால் 'அகர்த்தா' ஆகத் திகழ்கிறான். பகவான் வெளித் தோற்றத்தில் எதிலும் ஈடுபடாதது 'இருந்தபடி இருப்பினும்' தனது அருள் பிரகாச வலிமையால், மாபெரும் சக்தியைத் தரும் அகண்டாகார பூர்ணமாய் விளங்குகிறார். பலருக்கு அவர் மூலமாகவே பற்பல துறைகளிலும் சேவை செய்யும் அருட்சக்தி வழங்கப்பட்டது. இந்த அருட்பொழிவை, சரோஜினி நாயுடு, ராஜேந்திர பிரசாத் போன்றோர் மூலமாக காந்திஜிக்கு அளித்த சந்தேஸத்தில் பகவானே குறிப்பிடுகிறார். தனது இயல்பு நிலையில் இருந்தே இந்த அருட்செயல் நிகழ்த்தப்படுவதால், இதன் கர்த்தாவாகிய பகவானின் அருட்சக்தியைப் பெரும்பாலோர் அறிய முடியாமல் போகிறது. ஒருமுறை பகவானிடம் "தாங்கள் ஏன் உலக நன்மைக்காக ஊர்ஊராகச் சென்று தங்களது ஞானத்தை மக்களக்கு உபதேசிக்கக் கூடாது?" என்று ஒருவர்

வினவியபோது, "நான் அதைச் செய்யவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்" என்றார் பகவான். உடலின் மற்றும் மனதின் முயற்சி இன்றியே ஆத்மாவின் அற்புத சக்தியால் உலகம் முழுதும் இதன் தாக்கம் நிலை பெற்றது.

"மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ:" என்கிறது ஞானநூல். நம் மனத்தை நாம் ஒருமுகப்படுத்தி, நம் வசப்படுத்தினால் பிரபஞ்சம் முழுதும் நம் வசம்தான். பார்க்கக் போனால், விழிப்பு நிலை, கனவு நிலை என்ற இரண்டு நிலைகளில் மட்டும்தான் மனம் தோன்றுகிறது. ஆழ்துயில் நிலையில் மனம் இல்லை. எனவே பிரபஞ்சமும் தோன்றுவதில்லை. இந்தப் படைப்பு, பிரபஞ்சம் முழுதும் மனதின் சிருஷ்டியே. எனவே பகவான் கூறுகிறார்.

உலகு ஐம்புலன் உருவேறு அன்று; அவ் ஐம்
புலன் ஐம் பௌதிகட்குப் புலனாம் – உலகை மனம்
ஒன்று ஐம் பொறிவாயால் ஓர்ந்திடுதலால் மனத்தை
அன்றி உலகுண்டோ அறை. (உள்ளது நாற்பது)

பொருள்:

உலகம் என்பது ஐம்புல விஷயங்களின் உருவே. வேறு அல்ல. அந்த ஐந்து விஷயங்களும் ஐந்து இந்திரியங்கட்கு களம் ஆகும். இப்படிப்பட்ட உலகத்தை ஒரே மனம் ஐம்பொறிகள் (கண், காது, மூக்கு, வாய், மெய்) அறிவதால் மனத்தைத் தவிர வேறாக உலகம் என்று ஒன்றும் இல்லை.

மனதினது செயற்பாட்டால் மனிதன் தன்னைப் பந்தப்படுத்திக் கொள்கிறான். 'நான்' 'எனது' என்ற அஞ்ஞானம் நீங்க வேண்டும்.

"நான் தான் என்ற இரண்டும் கெட்டாலன்றி யாவர்க்கும் தோன்றாது ஸத்யம்" என்கிறார் அருணகிரிநாதர்.

அஞ்ஞானத்தில் எழுவதே ‘நான்’, ‘எனது’ என்னும் அகந்தை. அதனை நீக்கும் வழி, பொருள்மீதும், உலகின்மீதும், புகழ் மீதும் உள்ள பற்றை நீக்கி இறைவன் மீது பற்று வைக்கவேண்டும். இறைவன் மீது எப்படிப் பற்று வைப்பது? இறைவனுக்கு மகிழ்வு உண்டாகும்படி நடந்து கொள்வது.

த்வத் ப்ரபு ஜீவப்ரியம் இச்சஸி சேந்நரஹரி குரு ஸததம்
ப்ரதிபிம்பாலங்க்ருதி த்ருதிகுசலோ பிம்பாலங்க்ருதி மாதநுதே” (ஸதஸ்லோகி)

என பகவத்பாதர் கூறுகிறார்.

பிம்பத்தில் இருப்பதுதான் பிரதிபிம்பத்தில் பிரதிபலிக்கும். இறைவன் அல்லது ஆத்மா பிம்பம்; ஜீவன் பிரதிபிம்பம். பிம்பத்தில் செய்யப்படும் அலங்காரம் பிரதிபிம்பத்திலும் தெரிகிறது அல்லவா? அதுபோல ஆத்மாவைத் தனது ஞானத்தால் அலங்கரிக்கின்றபோது, ஜீவனும் தானாகவே எழில் பெறுகிறது.

பகவான் போன்ற ஞானிகள் நமக்கு வழிகாட்டுவதற்காகவே வந்துள்ளனர். பகவானது சிறப்பு வாய்ந்த பிரகடனம், “ஐயே! அதிசுலபம்! ஆன்மவித்தை ஐயே அதிசுலபம்!” என்பதே. உடலாலோ, மனத்தாலோ சிரமப்பட்டுச் செய்யும் செயலையே கடினமான செயல் என்கிறோம். பகவான், “இறைவனைக் காண்பது கடினமான வேலையே இல்லையே! உடலும், மனமும் இறைஉணர்வு பெறக் கடினமாக உழைக்க வேண்டிய தேவையே இல்லையே! உன் உடலும், மனமும் ஒன்றுமே செய்யாமல் சும்மா இருந்தாலே போதுமே! மனம் சும்மா செயல் ஏதும் இன்றி அமைதியாய் இருந்தால் ஆத்மாவை (கடவுளை) சுலபமாகக் காணலாம்.

பகவான் கடவுளைக் காணச் சும்மா இருந்தால் போதும் என்று கூறுவதின் பொருள் என்ன? நாம்

எப்போதும் சும்மா இருப்பதே இல்லையே! உடல் இச்சமயம் சும்மா இருந்தாலும் மனம் சும்மா இருப்பதில்லையே! அது எண்ணற்ற எண்ண அலைகளை நினைத்து விரிந்து பரவிக்கொண்டே அலைகிறது. அலை அடிக்கும் நீரில் பிரதிபிம்பம் தெரியாது. அதுபோல் எண்ண அலை அடித்துக்கொண்டு இருக்கும்போது நம் உருவம் பிரதிபலிக்கப் படாது. அசைவற்ற நீரில் முகம் பிரதிபலிக்கப்படுவதுபோல், 'நான்' என்னும் எண்ணமூலம் நினைவுகள் ஏதும் நீங்கி அசைவற்று இருக்கும்போது இறைவனின் காட்சி தெரியும். இதுவே முக்திக்கு வித்து.

*நுண்ணுரு உனையான் விண்ணுரு நண்ணிட*
*எண்ணலை அறும்என் அருணாசலா*

அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் ஒளிர்கின்ற அந்தப் பரமாத்மாவை நான் என் இதய ஆகாசத்தில் ஆத்ம விசாரத்தின் மூலம் தேடி அடையும்போது எனது எண்ண அலைகள் முழுமையாக அழியும் என்கிறார் பகவான். இது பகவான் காட்டும் பெருவழி.

*ஸாஸ்த்ரம் பூரிகுணஸ்வரூபமதயே ஸ்வாராதனார்த்தம் வபு:*
*தத் த்யானாய மனஸ்ச புத்தி மனகாம் க்ஷேத்ரம் ச தீர்ததான்யபி*
*தத்த்வான் யப்யுபதேஷ்டும் உத்தம குரூன் – தத்வா அனுக்ருஹ்ணாதிய:*
*ஸம்ஸாரே ததபி ப்ரமேய யதி கிம் குர்வீத ஸர்வேஸ்வர*
*(ஸதஸ்லோகி)*

பொருள்: "ஈஸ்வரனுடைய ஸ்வரூபத்தை அறிந்து கொள்ள ஞானநூல்களையம், அவரை வழிபட இந்த ஸரீரத்தையும் அவரைத் தியானிக்க மனத்தையும், பாவங்கள் விலகப் புண்ய க்ஷேத்ரங்களையும் தத்வத்தை உபதேசிக்க சீரிய ஆசார்யர்களையும்

அருளால் கொடுத்து, பகவான் நமக்கு அநுக்ரஹம் செய்தபோதிலும், இதில் மனத்தைச் செலுத்தாமல், நாம் சம்சார விஷயங்களிலேயே உழன்றுகொண்டே இருந்தோமாகில் இறைவன் மட்டும் (நம் முயற்சி இன்றி) என்ன செய்துவிட முடியும்?" இத்தனை பரந்த ஆன்மிக நந்தவனம் எதிரே விரிந்து கிடக்கும்போது, அதனை உட்புகுந்து அனுபவிக்காமல் காலத்தை வீணாக்காதே என்கிறார் பகவான்.

பகவானின் ஒரு தனிப்பட்ட சிறப்பு, இதுவரை பக்குவப்படாதவரிடம் அவர்களுக்கு எளிதில் புலனாகாத தத்துவத்தை அவர்கள் மீது பகவான் வலிந்து திணிப்பதில்லை. "மந்திர ஜபம் செய்து வழிபடுகிறேனே; அது நல்லதா? ஆன்மிக முன்னேற்றத்திற்கு வழிவகுக்குமா?" என்று கேட்பவரிடம் "ஆஹா! நிச்சயமாக! அதைத் தொடர்ந்து செய்யுங்கள். அதுவே விசாரத்தில் கொண்டு செல்லும்" என்பார். பூஜை முறைகளில் நம்பிக்கை கொண்டவரிடம் அதையே பின்பற்றுமாறு கூறுவார்.

"மாபுத்திபேதம் ஜனயேத்" என்று கண்ணன் கூறுவதுபோல், சாதனைகளில் படிநிலைகள் அறிந்து எந்த வழி சாதகனுக்கு உகந்ததோ, அதனைப் பின்பற்றச் சொல்கிறார்.

திடமிது பூசை ஜபமும் தியானமும்
உடல்வாக்கு உளம் தொழில் உந்தீபற
உயர்வாகும் ஒன்றில் ஒன்று.

என்று இந்தப் படிநிலைகளை அவரே விளக்குகிறார்.

அவரவர் தமதம அறிவறி வகைவகை
அவரவர் தமதம இறைவனை அடைகுவர்
அவரவர் இறையவா குறைவிலர்; இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே

என்ற நம்மாழ்வாரின் பரந்த தெய்வீகக் கொள்கையினை அறுதியிட்டு மொழிகிறார் பகவான். அதேசமயம்

எல்லாவற்றிற்கும் திறவுகோலான ஆத்மவிசாரம் அவர் கையில் இருந்தது. உகந்த சமயத்தில், படிபல கடந்து வந்த சாதகனிடம் அதனை அளிப்பார் பகவான். அறிஞர் M.P. பண்டிட் எடுத்துக்காட்டுவதுபோல, "அவர் மனித இனம் தமக்கு முன்னே உள்ள ஏராளமான தத்துவங்களையும் பாதைகளையும் பார்த்து, அதில் எதைத் தேர்ந்துஎடுப்பது என்று திகைத்து நிற்கையில் ஆன்மாவுக்கு நேர்பாதையைக் காட்ட வந்த ஆன்மிக வழிகாட்டி. அவர் புதிய அனுபவ எல்லைகளைத் திறந்துவிட்டு வேதகால ரிஷிகள் ஒவ்வொருவரும் முக்திக்கு புதியபாதை அமைத்ததுபோன்ற வித்த்தில் இருத்தலின் கேந்திரமான உண்மைக்குப் புதியதோர் நேரடிப்பாதை அமைத்தவர். ஆன்மாவின் அடியாழமான உண்மையின் வடிவானவர் அவர்."

ஆத்மாவின் இமயமான பகவான் அதே சமயம் எவரையும் 'தள்ளி நில்' என்று விலக்கியதே இல்லை. உலக ஆன்மிக வரலாற்றிலேயே எந்நேரமும் எத்தடையும் இன்றி, எவரையுமே தன்னை நேரடியாக அணுக அனுமதித்தவர் பகவான்.

மழை மிகப் பெய்ந்த ஒரு தீபத் திருநாளின் போது சேறும் சகதியான சாலையில் நடந்துவரும் கிராமமக்கள் பகவானின் அறைக்குள் அவரை மிக அணுகி அவரையும் சேறுபடச் செய்துவிடப் போகிறார்களே! என்ற எண்ணத்துடன் பாரிஷதர்கள் பகவானின் ஆசனத்திலிருந்து சற்று தூரத்தில் தடுப்பு அமைக்க, பகவானோ, கீழிறங்கி வேலிக்கு அருகாமையில் அமர்ந்து கொண்டார். எதிர்பார்த்ததுபோல, அவர்அமரும் இடம் முழுக்க சேறும் சகதியும் ஆனது. "இப்படிச் செய்து விட்டீர்களே பகவான்? அந்தச் சாமான்ய மக்கள் சற்று தூரத்தில் இருந்து தங்கள் தரிசனம் பெற்றுச் செல்லல் ஆகாதா?" என்று ஆசிரம அலுவலர் வினவியபோது, "அவர்கள் சாமான்யர்களா? அவர்கள் அனைவரும் அருணாசலனின் உருவங்கள்.

*அவர்களல்லவா எனக்குத் தரிசனம் தர வருகிறார்கள்!" என்ற ஆன்ம இமயம் பகவான்.*

*எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்*
*தம் உயிர்போல் எண்ணி உள்ளே*
*ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்*
*யாவர்அவர் உளம்தான் சுத்த*
*சித்திருவாய் எம்பெருமான் நடம்புரியும்*
*இடம்...."*

*என்ற வள்ளலார் வாக்கின் எடுத்துக்காட்டு பகவான்.*

*நாம் சிந்தித்துப் பார்த்தால் நாம் நமது உண்மை நிலை மறந்து நோக்கத்தினை மறந்து தாழ்நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்பது புலனாகும்.*

*பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்*
*மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து*
*கோலனாய்க் கழிந்தநாளுங் குறிக்கோள்*
*இலாதுகெட்டேன்*

*என்று அப்பர் சுவாமிகள் கூறுவதுபோல நமது குறிக்கோளை மறந்து உழல்கிறோம். பகவானது அவதாரம் நமது நிலை பற்றிய விழிப்புணர்வினை நம்முள் எழுப்புவதாகும்.*

*மஹாபாரதத்தில் போருக்கு முன்னால், "இறப்பு என்றால் என்ன?" என்று அறிய விரும்பிய திருதராஷ்டிரனுக்கு "நமது உண்மை நிலையை மறத்தலே மரணம்" (ப்ரமாதம் வை ம்ருத்யு ரஹம் ப்ரவீமீ) என்று விளக்கும் ஸனத் ஸுஜாத முனிவர், உண்மையை மீண்டும் பதிக்க நான்கு தேவைகளைக் கூறுகிறார். (1) சாஸ்திர ஞானம் -தத்வங்கள், வழிமுறைகள் பற்றிய அறிவு (2) உத்ஸாஹம் – தன் முயற்சி (3) குரு (4) காலம்.*

*பகவானின் போதனையோ ஆன்மிக சரித்திரத்திலேயே மிகச் சுருக்கமான ஒன்று. 'நான் யார்'*

*என்பதை உள்முக நோக்கால் அறிவதே அது. 'நான் யார்' என்பது வெறும் அறிவு சார்ந்த கேள்வி அல்ல. அது நமது சாமான்ய வாழ்வின் அஸ்திவாரத்தையே உலுக்கும் ஓர் பெரும் அஸ்திரம். அது பேருண்மையை நோக்கும் பெரும் தேடல். இந்தப் பேருண்மையைத் தேடும் பெருமுயற்சியில் குறுக்கே நிற்கும் எதிரி மனதுதான். எனவே பகவான் வெளிப்புறத் தாக்கங்களில் இருந்து மனதை விலக்கி அதைச் சலனமற்று இருக்க வைக்க அறிவுறுத்துகிறார்.*

*திரும்பி அகந்தனைத் தினம் அகக்கண்காண்*
*தெரியும் என்றனை என்அருணாசலா (அக்ஷரமணமாலை)*

*மதுஸூதன ஸரஸ்வதி அழகாகக் கூறுகிறார்:*

*த்யானாவ்யாஸ வஸூக்ருதே மனஸா யந்நிர்குணம் நிஷ்க்ரியம்*
*ஜ்யோதிர் கிஞ்சன யோகினோ யத் பரம்*
*பஸ்யந்தி பஸ்யந்தி தே*

*பொருள்: தியானத்தை அப்யாஸம் செய்து மனத்தைத் தம் வசம் வைத்திருக்கும் யோகிகளை அதன்மூலம் குணங்களையும் செயல்களையும் கடந்த பரஞ்ஜோதியைக் காண்கிறார்கள். கண்டுகொண்டே இருக்கிறார்கள்.*

*தன்னை உபாதிவிட்டு ஓர்வதுதானீசன்*
*தன்னை உணர்வதாம் உந்தீபற*
*தானே ஒளிர்வதால் உந்தீபற*

*என்று பகவான், குணங்கள்-செயல்கள் அற்ற பரஞ்சோதியே ஆன்ம ஸ்வரூபம். பந்தங்களை நீக்கியபின் உள்ளத்தில் அது தானே நிரந்தரமாய் ஒளிரும் என்று குறிப்பிடுகிறார்.*

*பகவான் ரமணரை 'ஞான சித்தன்' என்று குறிப்பிட்டுள்ளீர்களே! அவர் ஆகாயத்தில் பறப்பது போன்ற சித்துக்களைச் செய்துள்ளாரா?" என்று கேட்டபோது சாதுஓம் சுவாமிகள் கூறுகிறார்.*

“புழுக்களைப் போன்று புவி ஆசைகளில் ஒட்டிக் கிடக்கும் நம்போல் உலகில் புதைந்து பதியாமல், அவரது பற்றற்ற பொற்பாதங்கள் ஆன்மஞான ஆகாயத்திலேயே உலவுகின்றன” என்று விடையிறுத்தார்.

ஜீவன் முக்தரைப் பற்றிக் குறிப்பிடும்போது வேதாந்த தேஸிகர்,

‘தம்பாஸ ஸூயோதி முக்தம்’ என்றும் ‘பால்யம் ச பாண்டித்யம் ச நிர்வித்ய அத முனி’ என்றும் குறிப்பிடுகிறார்.

அகந்தை தற்பெருமை அனைத்தையும் நீங்கியவனாய் ஒரு பாலகனைப்போல் நிர்மலமான மனதுடன் ஜீவன்முக்தன் ஒளிர்வான் என்கிறார் வேதாந்த தேஸிகர். அவனிடம் கல்வியே வந்து வேண்டிக் கொள்ளுமாம்.

*வித்யா ஸஹ வை ப்ராண்மணா ஜகாம கோபால*
*மா ஸேவதிஷ்டேஹமய்மி*
*அஸூய காயான்ருஜ பேயதாய நமா ப்ருயா*
*வீரஸ்யபதி ததாஸ்யாம் (சதஸ்லோகீ)*

பொருள்: கல்வியானது அறிஞனை அணுகி, “என்னைக் காப்பாற்றுவாயாக. நான் உனக்கே தகுதியானவன். பொறாமைக்காரன், அற்பன், அடக்கமற்றவன் ஆகியோருடன் என்னைக் குறித்துப் பேசாதே. அப்போதுதான் தான் வீர்யத்துடன் இருப்பேன்” என்று கூறியதாம்.

புலனில் பற்று வைக்காதே என்கிறார் பகவான். சங்கரரது ஸதஸ்லோகி நூலின் ஒரு ஸ்லோகத்தை எடுத்துக் கூறும்போது, “மான், யானை, விட்டில் பூச்சி, மீன், தேனி இவைகள் ஒலி, ஸ்பர்சம், ஒளி, சுவை, மணம், இவைகளின் ஒன்றின் மீது பற்று வைத்ததால் நாசம் அடைந்தன. இந்த ஐந்து புலன்களின் மேலுமே தொடர்பு கொண்டுள்ள அஞ்ஞானியின் நிலை என்னவாகும்” என்று விளக்கினார்.

*மான்:* நல்ல சங்கீதத்தைக் கேட்டு அது தன்னை மறந்து நிற்கும்போது, வேடன் வலையில் பிடிபடுகிறது.

*யானை:* காட்டில் ஆண்யானையைப் பிடிக்க வேண்டும் எனில், ஒரு பழகிய பெண் யானையை ஒரு பள்ளத்தில் விடுவார்கள். தன் இனத்தைச் சேர்ந்த பெண் யானையின்மீது காதல் கொண்டு அதனுடன் இணைய அது பள்ளத்தில் இறங்கும்போது பிடிபட்டு விடுகிறது.

*விட்டில் பூச்சி:* மழைக்காலத்தில் விளக்கை ஏற்றி வைத்தால், அதன் ஒளியைக் கண்டு ஈர்க்கப்பட்டு, விட்டில் பூச்சிகள் விளக்கில் வீழ்ந்து மடிகின்றன.

*மீன்:* ஒழுங்காக ஆற்றில் இருக்கும் புழுவை உண்டு திருப்தி அடையாமல், மீன் நாம் போடும் தூண்டிலில் உள்ள புழுமீது ஆசைகொண்டு, அதனைக் கவ்வி, கொக்கியில் மாட்டிக் கொள்கிறது.

*தேனி:* பல மைல் தூரத்தில் உள்ள மலரின் மனம் ஈர்க்க, பறந்து சென்று தேனை மலரில் அமர்ந்து தேனைச் சுவைக்கிறது. அதன் ருசியில் மதிமயங்கி அம்மலரிலேயே தூங்கி விடுகிறது. இரவு வந்தவுடன் அந்த மலர் மூடிக் கொள்வதால் அதிலேயே மாட்டிக்கொண்டு அழிகிறது.

இங்ஙனம் இந்த ஜந்துக்கள் ஒவ்வொரு புலன் இன்பத்திலும் ஆசை வைத்ததால் அழிகின்றன. நாமோ இந்த ஐந்து புலன் சம்பந்தப்பட்ட வஸ்துக்கள் அனைத்திலும் பற்று வைத்துக்கொண்டு உள்ளோம்.

இந்த நாசத்திலிருந்து தப்பிக்க உள்ள ஒரே வழி

குரும் ஏவாபி கச்சேத்

ஸத்குரு ரமணன் பாதங்களிலேயே சரண் அடைக

மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## *11. ஆஸ்ரமத்தின் உள்ளே*

*இன்றும் வாழ்ந்து கொண்டிருப்போரைப் பற்றி எழுதுதல் சற்று சிரமமான வேலை. எனவே, ஆஸ்ரமவாசிகள் யாரைப் பற்றியும் குறிப்பிடாமல் இந்த நாட்குறிப்பில் பொதுவாகக் குறிப்பிடுகிறேன். நான் ஆஸ்ரமத்தில் தங்கியிருந்த காலத்தில் மூன்று அமெரிக்கர்கள் – ஒருவர் ஆடவர் மற்ற இருவரும் பெண்டிர் – ஆஸ்ரம வளாகத்தில் 14 ஆண்டுகளாக வசித்து வரும் ஓர் ஆங்கிலேயர், நான் அங்கு வந்தபின் வந்து சேர்ந்த ஓர் ஆங்கில மாது, ஒரு யூதர், போலந்து நாட்டைச் சேர்ந்த இருவர், ஒரு ஜெர்மானியர் மற்றும் சில பிரெஞ்சு மக்கள் ஆகியவர்களே அங்கிருந்த வெளிநாட்டவர். ஒரு சில நேரங்களைத் தவிர்த்து என்னுடைய காலம் முழுவதும் பகவானைச் சுற்றியே அமைந்தது. எந்தவிதமான சமுதாயம் சார்ந்த தொடர்பிலும் என்னை ஈடுபடுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை. இந்தச் சந்திப்புகள் பெரும்பாலும் ஆஸ்ரமத்தின் மையக் கூடத்திலும், பகவான் பெரும்பாலான நேரங்களில் தரிசனம் தரும் ஆலயத்திலுமே நிகழ்ந்தன.*

*ஆங்கிருந்த இந்தியர்களில் எனக்கு மிகவும் சுவாரஸ்யமானவர்கள் அங்கு வசித்திருந்த துறவிகளே ஆவர். அவர்களுள் சிலர் மிக்க புத்தி கூர்மையுடனும் கல்வி அறிவுடனும் திகழ்ந்தனர். மாலை வேளைகளில் அவர்களுள் சிலர் அருகில் உள்ள சிவாலயங்களில் அமர்ந்து, சுற்றுப்புற கிராமத்தைச் சேர்ந்த*

விவசாயிகட்கு போதனை அளிப்பதைக் கண்டுள்ளேன். அவ்வாலயங்களில் உள்ள பலிபீடங்களின்மீது தீபங்கள் ஒளிதந்து கொண்டிருந்தன. அவற்றின் படிகளின்மீது அமர்ந்து கொண்டு துறவியர்கள் சிலர் பாடல்களை இசைத்துக்கொண்டு இருந்தனர்.

ஆஸ்ரமத்திற்கு வந்திருந்த ஓர் இஸ்லாமிய பேராசிரியருடன் பல சமயங்களில் நான் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தேன். குழந்தையை ஒத்த அன்பும், தனது தேச மக்களின் மீது அவர் கொண்டிருந்த எல்லையற்ற அன்பும் என்னை மிகவும் ஈர்த்தன. நம் பகவானின்மீது அவர் பெரும் பக்தி கொண்டு இருந்தார். எனது நீண்ட கடிதங்களை அடிக்கடி அனுப்புவதன் மூலம் அவருக்குத் தொல்லை தருகிறோமோ என்று எண்ணினேன். ஆனால் அவர் அதைப் பற்றியே சற்றும் கவலையுறாது தனது கடமையை ஆற்றி வந்தார்.

நூற்றுக்கணக்கான அந்தணர்களும், அறிஞர்களும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆசிரமத்திற்கு இடையறாது வந்து கொண்டிருந்தனர். இந்திய ராஜ்யங்களின் பிரதிநிதிகள், அரசர்கள், பேரரசர்கள், அவரது குடும்பத்தினர் அனைவரும் அடிக்கடி அங்கே வருகை தந்தனர். அவர்களுள் சிலரது ஐரோப்பிய மனைவியர் ஜாஜ்வல்யமான புடவைகளில் மிளிர்ந்தனர். ஆஸ்ரமத்தின் சுற்றுச்சுவரில் இருந்து பல கஜங்கள் தள்ளி, அவர்கள் தங்கும் சிறப்பு விடுதிகள் இருந்தன. அவர்கள் ஆஸ்ரமத்திற்கு விலையுயர்ந்த பரிசுகளை அளித்தும், அதன் நிர்மாண வேலைகட்குப் பணம் ஈந்தும் பேருதவி செய்தனர். ஆனால் பகவானின் சன்னிதியில் பெருந்தனவந்தரோ, பரம ஏழையோ அனைவருமே சமம்தான் என்றும் ஓரிரு நாட்கள் மட்டுமே வர முடிந்த சில அரசர்கட்கு, ஆஸ்ரமப் பணியாளர்கள் பகவான் அருகாமையில் இடம் ஒதுக்கித் தருதல் வழக்கம்.

*ஆஸ்ரமத்தால் வெளியிடப்பட்ட நூல்கள் ஒழுங்காக அமைக்கப்பட்ட ஒரு பெரிய புத்தகசாலை இருந்தது. இதிலெல்லாம் எனக்குப் பெரிய ஈடுபாடு இருந்ததில்லை. என்னைப் பொறுத்தமட்டில் பகவான்தான் ஜொலிக்கும் சூரியன்; மற்ற அனைத்துமே அவரைச் சுற்றி சுழலும் கோள்களே.*

## *12 பகவானின் உபதேசம்*

*இது ஒரு சுவாரஸ்யமான விஷயம்; மேம்போக்காகப் பார்க்கும்போது இது ஒரு முரண்பாடாகத் தோன்றும். உலகத்தில் முதன்முதல் தோன்றிய தத்துவ சிந்தனைகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பாரத நாட்டு ரிஷிகளின் சிந்தனையில் உதித்தன. அதே சமயம் அவை ஆத்மிக சாதனைக்கு நவநவமான வழிகளை காட்டுகின்றன*

*பண்டைக்கால கிரேக்க ஆலயங்களின் கதவுகளில் 'க்ஞோதி ஸ்யோடான்' (தன்னையே அறிவாய்) என்பது பொறிக்கப்பட்டு இருக்கும். பிளேட்டோ கூறுகிறார்: "நீ உன்னை அறிந்திடில் உலகத்தையும், இறைவனையும் அறிவாய்." பகவான் காட்டும் விசாரப் பெருநெறியும் இதனையே கூறுகிறது. அதுவே இக்கால உலகிற்கு அவர் அளிக்கும் உபதேசத்தின் அஸ்திவாரம். இந்த விசாரம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அறியப்பட்ட ஒரு மார்க்கம் எனில் பகவானின் இந்த உபதேசத்தில் மாபெரும் வல்லமை எங்கிருந்து வருகிறது என்று நாம் அதிசயிக்கலாம். இந்தக் கேள்வியின் விடை மற்றொரு கேள்வியில் அடங்கியுள்ளது.*

*"யார் நமக்கு இந்த உபதேசத்தை எப்போது அளித்தனர்?" பகவான் இப்போது நம்மிடையே இருப்பவர். தனது சுயமான ஆத்மிக அனுபவத்தின் மூலம் நமக்கு இந்த விசார மார்க்கத்தின் வெற்றியை*

நமக்கு நேரடி நிரூபணமாக அளிப்பவர். சமய நூல்கள் எதையுமே கற்காமல் இந்த விசார மார்க்கத்தை உணர்ந்து, அதன் மூலம் ஆத்ம சாம்ராஜ்யத்தை வெற்றிகண்டவர் பகவான். பதினாறு வயது சிறுவனாக ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை எந்த வித வெளி உதவியும் இல்லாமல் தானாகவே அடைந்து ஸஹஜ சமாதியில் நிலைபெற்றவர் பகவான். அந்த ஆத்மிக சத்தியத்தைக் குறித்து எந்தவிதமான ஐயமும் அந்தச் சிறுவனுக்கு எழவில்லை. ஏனெனில் அவரே அந்தப் பேருண்மையாக மாறினார்.

ரமணாச்ரமத்தால் பதிக்கப்பெற்ற பொன்விழா மலரில் பேரறிஞரும் கவிஞரும் ஆன கிராண்ட் டஃப் எழுதுகிறார்: “நான் பகவானை முதன்முதலாக கண்ட அந்த நொடியில் அவர் கண்ணோக்கம் என்மீது விழுந்தவுடன் நான் சத்தியத்தின் பேரொளியை உணர்ந்தேன்”. பகவானின் சந்நிதியில் பலரது நேரடி அனுபவம் இது. கிராண்ட் டஃப் மட்டுமல்லாது, மிகப் பலர் பகவான் சன்னிதியில் இந்த ஆத்மானுபவத்தை உணர்ந்தனர். ஆத்மானுபவம் என்பது தன்னைத்தானே யார் என்பதை நேரடியாக உணர்தலே என்பதே இப்பேருண்மை. இந்த அனுபவம் நிகழ்ந்தவுடன் மற்றொரு அதிசயம் நிகழ்கிறது. இந்த ஆத்மானுபவி உலகில் உள்ள அத்தனை ஜீவன்களுடன் பிணைக்கப்படுகிறான்.

இந்த முகிழ்வை விளக்குவது என்பது இயலாத காரியம். நான் பகவானிடம் மூன்று முறை மட்டுமே பேசினேன். அந்த மூன்று முறையும் சில மணித்துளிகளே நீடித்தன. எனினும் அந்த சில மணித்துளிகளைத் தாண்டி, வேறு எதுவுமே தேவைப்படவில்லை. வார்த்தைகள் என்பது தேவையற்ற, குழப்பமான அரைகுறை என்பதை உணர்ந்தேன். இந்த இந்த நூலின் இறுதிப் பகுதியான ‘எனது விடைபெறல்’ என்பதில்

நான் உள்ளார்ந்த மௌனத்தில் ஆழ்வதை வாசகர் காணலாம்.

இப்போதைய இந்திய ராஷ்டிரபதி ஆன ராஜேந்திர பிரசாதை பகவானைக் காண காந்திஜி ஒரு விளக்கம் பெற அனுப்பியபோது, பகவான் கூறினார்: “இதயம் மற்றொரு இதயத்துடன் நேரடித் தொடர்பு கொள்ளும்போது வார்த்தைகட்கு என்ன தேவை?” ராஜேந்திர பிரசாத் காந்திஜியிடம் பகவான் கூறிய இந்த விடையை கூறிய போது, காந்திஜி அதன் முழு அர்த்தத்தையும் உடனே உணர்ந்து கொண்டார்.

“நான் யார்” என்ற தேடலே பகவானின் எல்லா உபதேசத்திற்கும் அடித்தளம். இந்த விசாரணையை நாம் செய்யும்போது நமது புலன்கள் மற்றும் மனம் அனைத்துமே நிலையற்றவை, உபாதிக்கு உட்பட்டவை என்று உணர்ந்து, அவற்றை முற்றிலும் ஒதுக்கி, மெய்யான நான் யார் என்பதை விசாரிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். இவை அனைத்தையும் நிலையற்றவை என்று ஒதுக்கிய பின் எது மீதி இருக்கிறதோ அதுவே பரமார்த்த சத்தியம் என்கிறார் பகவான்.

இந்த விசாரணையே இடையறாது செய்வதின் மூலம் நாம் பூரண மௌனத்தை அடைகிறோம்.

தனது வாழ்நாட்களில் பல்லோர் கேட்ட வினாக்கட்கு எல்லாம் பகவான் விவரமான விளக்கங்களை அளித்துள்ளார். ஆசிரமம் பதிப்பித்துள்ள பல்வேறு நூல்களுள் இவ் வியாக்கியங்களைக் காணலாம். அவரது மிகச்சிறந்த சிஷ்யரான லக்ஷ்மண சர்மா எழுதிய ‘மகாயோகா’ என்ற சிறந்த நூலில் இவ்விளக்கங்களைக் காணலாம். பகவான் உபதேசத்தை அறிய விரும்பும் அனைவரும் அவரது உபதேசங்களைத் தெளிவுறத் தொகுத்துள்ள இந்நூலில் காணலாம்.

ஆத்மிக விஷயங்களைப் பற்றி எழுதும் ஓர் எழுத்தாளனின் பயன்பாடும், படிப்பவரை ஈர்க்கும், திறனும், எழுத்தாளனின் உள்ளுணர்வினைச் சார்ந்துள்ளது. நாம் நமது எண்ணங்களையும் நமது பிரச்சினைகளையும் கொள்கைகளையும் எழுத்தில் வடிக்கலாம். அவை அனைத்துமே நமது வெளிமனம் பெற்றெடுக்கும் குழந்தைகளே. நமது ஆத்மிக உணர்வு அவற்றிற்கு உயிர்ப்பு ஊட்டாவிடில் அவை செத்துப் பிறக்கும் குழந்தைகளே.

தனது உபதேசங்களை கூறும் ‘மௌனத்தின் குரல்’ என்ற நூலில் மேடம் பிளவாட்ஸ்கி கூறுகிறார்: “மனம் என்பது ஒரு கண்ணாடி; அது பிரதிபலிக்கும்போதே பயனற்ற தூசியையும் ஈர்க்கிறது”.

ஆன்மிகத் தேடலில், மனதின் செயல்பாடு ஒரு கண்ணாடியைப் போன்றது. நமது வெளிமனதின் துணைகொண்டு மட்டும் நாம் எழுதும் போது, நாம் பொருத்தமான வார்த்தைகளையும், கருத்துக்களையும் தேடி, காகிதத்தில் பதிவு செய்கிறோம். நமது மனம் செய்யும் வேலையே இது. இங்ஙனம் மனதின் கட்டுப்பாட்டில் நாம் செயலாற்றும்போது ஒரு பொய்மை உலகிலேயே நாம் வாழ்கிறோம். நிரந்தர சத்தியமான ஆன்மா நமது பொய்மையால் திரை போட்டு மூடப்படுகிறது.

பகவான் கூறும் வழியானது, நமது மனக் கண்ணாடியின் கோணல்களை எல்லாம் கடந்து உயரிய பிரக்ஞை நிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும் சீரிய பாதை. இது பரமாத்மாவை உணரும் நெறி. இந்த நிலையிலிருந்து நாம் எழுத முற்படும் போது, நாம் கருத்துக்களையோ, வார்த்தைகளையோ தேடித் தேர்ந்தெடுப்பதில்லை. அவை நம் உள்ளுணர்வில் இருந்து தாமே வெளிப்படுகின்றன. மிகவும் கற்றறிந்தவனாக தன்னை எண்ணிக் கொள்ளும்

ஒரு பண்டிதன் கேட்கலாம்: "என்ன மௌனியாரே! நீங்கள் கூறுவதை வெளிப்படையாகவே புத்தர் கூறும் பிரக்ஞை உணர்வு என்று கூறலாமே!" இத்தகைய ஒரு வியாக்கியானம் இந்தியத் தத்துவக் கோட்பாடுகளை கற்று இராத ஒருவருக்கு எந்த விளக்கமும் தராது.

அருணாசல பரமாத்மாவாகிய பகவான் மற்றொரு வழிகாட்டுதலையும் அளிக்கிறார். நாம் இப்பிறவியிலேயே நமது உலகியல் பிரக்ஞை உணர்வைக் கடந்து, பாரமார்த்திக பிரக்ஞை நிலையை அடைய முயல வேண்டும் என்பதே. அந்த பாரமார்த்திக பிரக்ஞையை அடையும்போது, நாம் மரணமில்லா பெருவாழ்வு என்பதை இன்றே, இங்கேயே பெறமுடியும். இந்நிலையை எட்டியவுடன் நமது அச்சங்கள், தடுமாற்றங்கள் அனைத்துமே நீங்குகின்றன. இந்த நிலைதான் "விலைமதிப்பற்ற மாணிக்கம்", இதனை அடைய எத்தனை கடும் முயற்சியையும் செய்யலாம். இதனை அடைந்தபின் இது நம்மை விட்டு நீங்கவே நீங்காது.

பகவான் வெறும் வறட்டுத் தத்துவங்களைப் பேசியவர் அல்லர். அவரது பிரசித்திபெற்ற வாக்கியம் "அவதாரம் என்று ஒன்றும் கிடையாது; ஈஸ்வரன் என்று ஒரு தனிப்பட்ட வியக்தியும் இல்லை; அனைத்தும் சூனியமே சுன்யமே; நீ நீயாக இருப்பது தான், அந்த இருப்புநிலை ஒன்று தான், நீ செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று. உபாதி ஏதுமற்ற பரப்பிரம்ம நிலையை அடையும் ஒருவனின் இறுதி நிலை பேருண்மை இதுவே." பகவான் அடைந்த பாரமார்த்திக நிலை இதுவே. 'அதை நாம் அனைவருமே அடையமுடியும்' என்று பகவான் அறுதியிட்டுக் கூறுகிறார்.

நமக்காக இப் பூவுலகில் வந்த இந்தப் பரம்பொருளின் நோக்கம், ஏதோ ஒரு புதிய உபதேசத்தை அருள்வது அல்ல; வேதாந்த நூல்களில் கூறப்பட்டுள்ள பேருண்மை

நெறிகளை தானே வாழ்ந்து காட்டி, அவற்றிற்கு புத்துயிரூட்டி, "உன்னால் முடியும் தம்பி" என்று நமக்கு எடுத்துக் காட்டுவதுதான். பகவான் மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கும் மகாயோகம் இதுவே.

உலகின் பல்வேறு சமயங்கள் கூறும் நெறிகள் யாவும் ஒரு சாமான்ய மனிதனுக்காகக் கூறப்பட்டவை. எப்படி ஒரு சராசரி மனிதன் தினசரி வாழ்க்கையை நடத்த வேண்டும். அப்படி தர்ம நெறிப்படி வாழ்ந்தால் பின்னர் சுவர்க்கபோகம் அனுபவிக்கலாம் என்று இவை கூறுகின்றன. அவற்றைப் பொறுத்தமட்டில் அவை பயன் தருபவையே. 'செயலும் விளைவும்' என்ற விதிப்படி அவை செயல்படுகின்றன. இவை இயற்கை விதிகள். தினசரி வாழ்க்கையில் நற் செயல்கள் பல செய்து நமது எதிர்கால வாழ்க்கைக்கு வைப்பு நிதியை நாம் உருவாக்குகிறோம். ஆயினும் நமது பிறப்பின் உண்மை நோக்கமாகிய 'ஆத்ம ஸாக்ஷாத்காரம்' என்பதை நாம் கருதும்போது இத்தகைய சிறிய நோக்கங்கள் மதிப்பிழக்கின்றன. நாம் ஆன்ம சாதனையில் தீவிரமாக ஈடுபடும் போது, நாம் தீய செயல் எதையுமே செய்யக்கூடிய மனப்பாங்கில் இருந்து விடுபடுகிறோம். ஏனெனில் 'தீமை' என்பதே நமது அகங்காரத்தில் தூண்டப்படும் இந்த நிரந்தரமற்ற வாழ்வினில் அடங்கியதே. இதை ஆத்ம சாதனை செய்யும்கால் நாம் முற்றிலும் கடந்து செல்கிறோம். பகவான் கூறும் 'சித்-ஜடக்-கிரந்தி' எனும் முடிச்சு அவிழ்க்கப்படுகிறது.

பகவான் கூறும் மற்றொரு முக்கியமான கருத்து, "ஆத்மா பரிணாமம் அடைந்து முக்தி நிலை பெறுகிறது" என்பதை மறுக்கும் அஜாத சித்தாந்தம். அவர் எடுத்துக் கூறும் கருத்து மெய்மையை ஒட்டியும், தர்க்கப்பூர்வமான உண்மையாகவும் அமைந்துள்ளது. 'ஆத்ம ஞானம்' ஏதோ புதிதாய் அடையப்படும் ஒன்று

அல்ல. ஆத்மா எப்போதும் நம்முள் நிரந்தரமாய் ஒளிர்ந்து கொண்டு உள்ளது. அதனை அஞ்ஞான இருள் என்னும் போர்வை மூடி, அவ்வொளியை நாம் காண விடாமல் தடுக்கிறது. நாம் செய்ய வேண்டியது எல்லாம் இப்போர்வையை அகற்றுவதே மட்டுமே. உடனே உள்ளொளியை காண்போம். அதைப் போய் எங்கேயோ தேட வேண்டாம்.

நாம் மேற்கண்ட பகவானின் இவ்வுபதேசம் உபநிஷதங்கள் வாயிலாக வெளியிடப்பட்ட ரிஷிகளின் கருத்துக்கள்; இதை எல்லோரும் உடனே ஏற்றுக் கொள்வர் என்பது இயலாததாகும். மனிதவர்க்கம், ஒரு குறிப்பிட்ட உயர்நிலையை எய்தும்வரை, பொருள் மட்டும், பொறிகள் தொடர்பான வாழ்வில் ஈடுபடுவதையே விரும்புகிறது. நாம் ஒரு சிறு குழந்தையை உடனே இளைஞனாக மாற்ற முடியாது; அதேபோல் ஒரு வாளித் தண்ணீரை ஒரு சிறு குடுவையில் ஊற்ற முடியாது. காலப்போக்கில் அச்சிறுவன் வளர்ந்து இளைஞனாவான். இப்போது யாரெல்லாம் ஆத்ம சாதனையில் முன்னேறி உள்ளார்களோ அவர்கள் அனைவரும் நமது இறை தூதனாம் பகவானின் உபதேசத்தை கற்றுப் பயன்பெற வேண்டும். அவர் தமது பௌதிக வாழ்வில் அச்சாதகர்களை அரவணைத்து, ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடையும் இறுதிப் படிகளில் ஏற உதவி செய்ய வந்துள்ளார்.

இந்தப் பகுதியை முடிக்கும் முன்னர் பகவானின் மற்றொரு உபதேசத்தை எடுத்துரைக்க விரும்புகிறேன். “உன்னுடைய ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடைதலே நீ உலகிற்கு ஆற்றக் கூடிய மிகப் பெரிய தொண்டு.”

எனவே அன்பர்களே! இவ்வுலகில் உள்ள அனைத்து ஏழைகளின் பசி போக்கி, கண்ணீர் துடைக்க

*முடியவில்லையே என வருந்தாதீர். அந்நிலை அவரவர் கர்மத்தின் பயனாக வந்துற்றதே. ஓர் ஆசீர்வதிக்கப் பட்டவனாக நீவீர் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு நிலையிலும் செயல்படுங்கள். கூடுமானவரை உதவி ஆற்றுங்கள். அதேசமயம், இந்த நிலையற்ற உலகில் பந்தங்களில் உங்களை சிக்க வைக்கும் எந்த ஒரு செயலிலும் ஈடுபடாதீர்கள்; அப்படி ஈடுபட்டால் உங்கள் குறிக்கோளை விட்டு நீங்கள் வழி தவறி விடுவீர்கள்."*

*நீங்கள் ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடையும்வரை நம் செயல்கள் சரியானவையா என்ற ஐயம் இருந்துகொண்டே இருக்கும். ஆயினும் நம் செய்கையில் தவறு ஏதும் இழைக்காமல் இருக்க ஒரு வழி உள்ளது. அது நம் பகவான் கூறும் வழி; நம் செயல்கள் எவற்றிலும் 'கர்த்ருத்வம்' – தன்முனைப்பு – 'நான் செய்கிறேன்' என்ற ஆணவம் தலைகாட்டாமல் செயல்படுவதே. 'மகா யோகா' நூலில் 'அகங்காரமற்ற பிரக்ஞை நிலை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*பகவான் கூறுகிறார்:*

*"இறைவனிடத்தும் உன்னிடத்தும் நம்பிக்கை வை. அது எல்லாக் குறைகளையும் சீர் செய்யும். சிறந்த முதலையே எப்போதும் எதிர்பாருங்கள். சிறந்த முடிவையே எதிர் நோக்குங்கள். சிறந்த முடிவுக்காகவே உழையுங்கள். இறுதியில் எல்லாமே உங்களுக்கு சிறப்பாக முடியும்."*

*ஓ இறைவனே! எல்லாரையும் ஒன்றாய்ப் பார்க்கும் சம திருஷ்டியையும், உலகளாவிய அன்பையும், எனது ஆன்மிக குருவிடம் இடையறாத பிணைப்பையும் எனக்கு நல்குவாய்!*

*(இன்னும் நாட்கள் வரும்)*

# எல்லா மைலார்ட்

### வி.நிரஞ்சன்

*செப்படி வித்தை கற்று இப்படி மயக்கு விட்டு*
*உருப்படு வித்தை காட்டு அருணாசலா*

*ஸ்ரீபகவான், அட்சர மணமாலை*

இருபதாம் நூற்றாண்டு உலகத்திற்கு, குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு, ஒரு சோதனைக் காலம். முதற் பாதியிலேயே இரண்டு உலகப் போர்கள் மக்களைக் கலங்க வைத்திருக்கின்றன. இனப்படுகொலை என்னும் கொடுமை ஓர் இனத்தையே அடியோடு அழிக்கும் அளவிற்குச் சீற்றம் கொண்டு இயங்கிய காலம். மக்களின் கிளர்ச்சிகளும் புரட்சிகளும் பொங்கி எழ, மன்னர் ஆட்சி கீழே விழ, குடியேறிய நாடுகளில் அன்னியர் ஆதிக்கம் நிலைகுலைய, நிகழ்ந்த பெரும் மாற்றங்கள் மக்களைப் பலவாறு பாதிதித்து இருந்தன.



அச்சமயத்தில் புறத்தே புயலும், சூறாவளியும். ஆழிப்பேரலையுமாய்ச் சதா ஆர்ப்பரித்துக் கொண்டு இருக்கும் பெருங்கடலின் உள் ஆழ்ந்து மையப்பட்டிருக்கும் மோன சாந்த சன்னிதியாய்ப் பகவான் திகழ்ந்துகொண்டு இருந்தனர். அதன் காரணமாகத்தான் நற் கிரியைகளின் விளைவாகவும், தன் உண்மை அறியும் ஆர்வம் மேற்கொண்டும், உலகில் பெறும் வெற்றிகளின் வெறுமையால் தாக்குண்டு நித்திய சாந்தியைத் தேடு முகமாகவும்,

பலர் பல திக்குகளில் இருந்தும் பகவானை நோக்கி ஈர்க்கப்பட்டனர். அவர்களுள் ஒருவரே எல்லா.

அவர் பகவானை அடையும் முன் இருந்த நிலையை சற்றே அறியலாம். அவர் சுவிட்சர்லாந்து நாட்டினர். வசதியான குடும்பம். தந்தை ஃபர் எனப்படும் விலங்குகளின் உரோமத்தால் செய்யப்படும் மேலாடைகளை வர்த்தகம் செய்பவர். தாய் விளையாடுக்களில் ஆர்வம் உடையவர். இளம் வயதில் எல்லா பலவீனமாக இருந்ததால் பெரும்பாலும் சிறுவருக்கான நூல்களே அவருக்குப் பொழுதுபோக்காய் இருந்தன. நூல்கள் கற்பித்த உலகத்தில் அவரது மனம் அலைந்துகொண்டிருந்தது.

ஜெனிவாவில் குடியேறியபின் அவரது தாய் அவருக்கு பனியில் சறுக்கி விளையாடுவதைப் பயில்வித்தார். பனிச்சறுக்கு எல்லாவை முழுதுமாய் ஈர்த்துக் கொண்டது. அதன் பின்னர் அவர் பாய்மரக் கலங்களைச் செலுத்தப் பயின்றார். அவருடைய தோழி ஒருவருடன் கூடி பாய்மரக் கலம் செலுத்தும் போட்டியில் பரிசும் பெற்றார். மத்திய தரைக் கடலில் பல துறைமுகங்களுக்கும் பாய்மரக்கலத்தைச் செலுத்திச் சென்றிருக்கின்றார். கிரேக்க மாவீரன் யுலிசிஸ் ட்ரோஜன் போர் முடிந்து தனது நாடான இதாகாவிற்கு கடல்வழியாகப் பயணித்த தடத்தில் சென்று தனது தோழியருடன் சாதனை படைத்தவர் எல்லா. மகளிருக்கான ஹாக்கி விளையாட்டுக் குழுவினை நிறுவி போட்டிகளில் பங்கெடுத்தவர். 1924-ஆம் ஆண்டு பாரிஸில் நிகழ்ந்த ஒலிம்பிக் விளையாட்டுகளில் ஒன்றான பாய் மரக் கலம் செலுத்தும் போட்டியில் அவர் தனது நாட்டிற்காகப் போட்டியிட்டவர். அந்தக் காலத்தில் இவ்வகை விளையாட்டுக்களிலும் போட்டிகளிலும் பெண்கள் பொதுவாக விலக்கப்பட்டிருந்தனர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

எல்லா, தந்தையின் வர்த்தகத்தைத் தானும் மேற்கொண்டு செல்வச் செழிப்புடன் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவரது மனம் அதில் ஈடுபடவில்லை. சுதந்திரமாகச் செயல்பட விரும்பினார். இதில் எல்லா அவரது அன்னையைப் போன்றிருந்தார். அவர் அண்மையில் இருந்த ஃப்ரான்சிலும் இங்கிலாந்திலும் பலவிதப் பணிகளை ஏற்றுக்கொண்டு சுதந்திரமாயும் மனதுக்கு விருப்பமாயும் வாழ ஆரம்பித்தார். மகளிருக்கு என்று விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் இருந்து இயல்பாக விடுபட்டவராய் இருந்தார். ஆடவருக்கான ஆடைகளை அணிவது அவருக்கு இயல்பாகப் போனது. ஆடவர் பெண்டிர் என்கின்ற பால் வேற்றுமைகளையும் கட்டுப்பாடுகளையும் இயல்பாகவே விட்டு விலகி நின்றார். கடினமான பணிகளை ஏற்றுக்கொண்டார். கடல் வழிப்பயணத்திற்காக ஆயத்தப்படுத்திக் கொள்ள இங்கிலாந்தில் மாலுமிகளுக்கான பயிற்சி பெறுவதற்காக கப்பலின் மேல் தள பணியாளராகப் பணியாற்றி இருக்கின்றார். தனது நாட்டையும் ஏன் பூமியின் நிலப்பரப்பையும் கடந்து பெருங்கடலில் எங்கோ வெகு தொலைவில் ஒரு கற்பனை உலகை நோக்கி அவர் சென்றுகொண்டிருந்தார்.

‘மேலை நாடுகளின் இழிவு’ என்று ஒரு நூல் அக்காலத்தில் ஸ்பெங்க்லர் என்னும் ஆராய்ச்சியாளரால் எழுதப்பட்டது. பண்டைக்காலத்தில் செல்வச் செழிப்பிலும் கலை வளர்ச்சியிலும் உச்ச நிலையில் இருந்த மேலை நாடுகள் இருபதாம் நூற்றாண்டில் சீர்குலையத்துவங்கின. சமயங்கள் சடங்குகளாய் விட்டன. சமயங்களில் ஆழ்ந்து கிடக்கும் உண்மைகள் மக்களின் கவனத்திற்கு எளிதாக வராது போயின. ஆன்மீக குருமார்கள் அங்கே இருந்து கொண்டிருந்தாலும் மக்களுக்குக் கிடைத்தற்கு அரியராயினர். விஞ்ஞானமும் பொருளியலும் (science

*and materialism)* மட்டுமே மக்களின் முன்னேறத்திற்குத் தேவை என்னும் கொள்கை பரவலாய் இருந்தது. உடல் உண்மை, உயிர் உண்மை, உலக போகங்கள் உண்மை, வெற்றிகளும் சாதனைகளும் மட்டுமே உண்மை, ஆதலால் விடா முயற்சியும் போராடுதலும் ஒருவரை ஒருவர் விஞ்சுதலும் வாழ்வின் இலட்சியங்களாய்ப் போய்விட்ட காலம் அது. இன்றும் கூட இந்த பாவனை மக்களிடம் பரவலாய் இருப்பதைக் காண்கின்றோம். ஆன்மீகப் பயிற்சிகள் தரம் நீர்த்து சாமானியமாக்கப் பட்டு தூல லௌகிக சித்திகளை அடைவதற்கு உதவும் வழியாக மட்டுமே மேல் எழுந்தவாரியாகக் கற்றுத்தரப்படுகின்றதை இன்றும் காண்கின்றோம்.

உலகம் அநித்தியம், வாழ்வு அநித்தியம், உலகபோகங்கள் அநித்தியம், இந்தக் காட்சிகளின் பின்னால் ஏதோ ஓர் உண்மை இருக்கின்றது, சுகத்திற்கும் துக்கத்திற்கு அப்பால் ஒரு சாந்த பூமி உள்ளது, அது என்ன, அதை அடைவது எப்படி என்றுதெரியாமல் தவித்துக் கொண்டிருந்தவர்களும் எல்லாவின் காலத்தில் உண்டு. வழிகாட்டுவதற்கு மெய் அறிந்த ஞான குரு ஒருவருக்காக ஏங்கி இருந்தவர்கள் பலர் உண்டு. அவர்களில் உயர்ந்த பக்குவிகள் பகவானை அடையும் பேறு பெற்றனர். மேஜர் சாட்விக்கும் எஸ்.எஸ். கோஹனும், மாரிஸ் ஃப்ரைட்மனும், பிற்காலத்தில் ஆஸ்பார்ன் தம்பதிகளும் அத்தகைய சற்சீடர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் பல்கிப் பெருகினர். இன்றும்கூட பகவானிடம் அடைக்கலம் புகவேண்டிய பக்குவிகள் அவரை எப்படியாவது வந்து அடைந்து விடுவதைக் காணலாம்.

பார்த்தனன் புதுமை உயிர் வலி காந்தப்
பருவதம் இதனை ஒருதரம்
ஓர்த்ததன் உயிரின் சேட்டையை ஒடுக்கி
ஒரு தனது அபிமுகமாக

*ஈர்த்து அதைத் தன்போல் அசலமாச்செய்து அவ்*
*இன்னுயிர் பலிகொளும் இஃது என்*
*ஓர்த்து உய்மின் உயிர்காள் உளம் அதில்*
*ஒளிர் இவ் உயிர்க் கொலி அருணமாகிரியே*

*அண்ணாமலையில் மூன்று சற்குருமார்களின் சன்னிதி இருப்பதை பகவான் இங்கே குறிப்பிடுகின்றனர். ஒன்று உயிரை வலிந்து ஈர்க்கும் காந்த மலை. அது அருணமாகிரி. இரண்டாவது. ரமணமகா குரு (பகவான் இதனைக் குறிப்பிடாது விட்டனர்). மூன்றாவது குரு ஒவ்வொரு ஜீவனின் உளமதில் ஒளிரும், அகந்தையை மாய்க்கும் ஆன்ம மெய்யுணர்வு. பக்குவிகள் இப்படித்தான் அண்ணாமலை வந்து பகவான் சன்னிதியில் தன்னால் தன்னை இழந்து தானாயினர்.*

*ஆனால் எல்லா பகவானை உடனே வந்து சேர்ந்துவிடவில்லை. 1930லிருந்து 1940 வரை அவர் பல விதங்களில் கடுமையான பயணங்களை மேற்கொள்ள வேண்டியவரானார். ஒரு ஃப்ரெஞ்சுப் பத்திரிக்கைக்காக பயணக் கட்டுரைகள் எழுதத் துவங்கினார். அவரது பணி செய்திகளே வராது இருட்டடிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து செய்திகளைச் சேகரித்துக் கொணர்தல். குழப்பமான அரசியல் சூழ் நிலையிலிருந்த ரஷ்யாவில் இரு முறை பயணித்து ரஷ்யாவின் கிழக்குக் குடியரசு நாடுகளில் மக்களோடு ஒருத்தியாகவே பழகி வெளி உலகு அறிந்திராத பல செய்திகளை அவர் வெளியிட்டார். மேலும் ஆசியாவின் பிற பகுதிகளைப் பற்றியும் அரிய செய்திகளை வெளிக்கொணர்ந்தார். அக்காலத்தில் இப்பகுதிகளில் நிலவிய சூழ்நிலை பற்றிய விவரம் வெளி உலகிற்குத் தெரியாமல் இருட்டடிப்புச் செய்யபட்டிருந்தது. 1932-இல் சோவியத் டர்கிஸ்தானில் தனி ஒருவளாகப் பயணித்து அம்மக்களைப் பற்றிய விளக்கச் செய்திகளை ஒரு நூலாக வெளியிட்டார். அதன் பிறகு கருங்கடலுக்கு*

அண்மையிலிருந்து கடல் வழியாகப் பயணித்து அரபிக் கடல் இந்துமகா சமுத்திரத்தில் நெடுந்தூரம் பயணித்து ஜப்பானியர்கள் வசம் இருந்த சைனாவின் மஞ்சூரியா பகுதிக்கு வந்து சேர்ந்தார்.

அவரது இந்தப் பயணங்கள் அனைத்தையும் பெரும்பாலும் அவர் தனியாகவே மேற்கொண்டிருந்தார். நில வழியில் பயணிக்கையில் நடந்தும், குதிரைகள் அல்லது ஒட்டகங்களில் அமர்ந்தும் பயணித்திருக்கின்றார். தனியாகவே ஒட்டகத்தின் மேல் அமர்ந்து பல நாட்கள் பயணித்திருக்கின்றார். அக்காலத்தில் பாதைகள் வசதியானவையாய் இல்லை; நேர் பாதையும் இருந்திராது. வழியில் எத்துணையோ இடர்ப்பாடுகள். அந்த அந்த இடத்தில் தடுப்புக்கள், காவலர்கள் வழி மறுத்தல், அரசு அதிகாரிகளின் கடுமை, மொழி தெரியாத சிக்கல், விடுதிகள் இல்லாமையால் வழியிலேயே சிறு கூடாரம் அமைத்து இரவில் தங்குதல், கிடைத்த பொருள்களைக் கொண்டு வெட்டவெளியில் எளிய உணவைச் சமைத்தல், சிற்சில சமயங்களில் ஒரே உணவைப் பல நாட்கள் அல்லது வேளைகளில் உண்ணுதல், என்றவாறாக எல்லா பயணித்து வந்தார், ஒருபுறம் ஜப்பானியர்களின் வன்முறை, மறுபுறம் மஞ்சூரியாவில் போராளிகளை வைத்துக்கொண்டு ஒருவர்க்கு ஒருவர் போரிட்டுக்கொண்டு மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்த குறுநிலத் தலைவர்கள் இதை எல்லாம் எல்லா கண்டு வெளி உலகிற்குத் தெரிவித்தார். அங்கெல்லாம் போய் செய்தி சேகரிக்க ஆடவரே அஞ்சி இருந்த காலத்தில் தனி மகளாக பீகிங் வரை பயணித்தார் எல்லா. அங்குதான் அவர் பீட்டர் ஃப்ளெமிங்க் என்னும் ஆங்கிலேய இளைஞனை சந்திக்கின்றார்.

இந்தச் சந்திப்பு ஒரு வியக்கத்தக்க சந்திப்பு. இதற்கு முன் எல்லாவும் பீட்டரும் லண்டனில் சந்தித்திருந்தனர். பீட்டர் அமெரிக்காவின் முக்கிய பத்திரிக்கையான

டைம்ஸில் சிறப்புச் செய்தியாளராகப் பணியாற்றிவந்த இளைஞன். அன்னிய நாட்டவருக்கு அனுமதி மறுக்கப் பட்டு சைனாவில் என்ன நடக்கின்றது என்பது வெளி உலகத்திற்குத் தெரியாமல் தடுக்கப்பட்டுவிட்ட சிக்கலான காலம் அது. அந்த இக்கட்டான நிலையில் சைனாவிற்குள் எப்படிப் பயணிப்பது என்று எல்லா கேட்ட கேள்விக்கு பீட்டர் எப்படியும் முடியாத காரியம் என்று உறுதிபடத் தெரிவித்து விட்டார். ஏதாவது ஒரு செயல் முடியாது என்று கேள்விப்பட்ட உடனேயே எல்லாவின் மனதில் அது என்னால் முடியும் என்று எழும். எல்லா பிரியும்பொழுது பீட்டரிடம் மீண்டும் பீகிங்கில் சந்திக்கலாம் என்று கூறி பீட்டரை அதிரச் செய்தார். அது வெறும் வாய்ச் சொல்லாக இருந்துவிடாமல் அவர் பயணித்து பீகிங் வந்து பீட்டரையும் எதிர்பாராத விதத்தில் சந்தித்தும் ஆகிவிட்டது.

எல்லாவும் சரி பீட்டரும் சரி இருவரும் தனிமை விரும்பிகளே. ஆனால் காலத்தின் கட்டாயத்தால் இருவரும் சேர்ந்தே பீகிங்கில் இருந்து சைனாவின் உட்பகுதியினூடு பயணித்து தெற்கு நோக்கிச் சென்று திபேத்தின் வடக்கு எல்லை பின்னர் காஷ்மீரம் அதன் பின்னர் ரஷ்யாவின் தெற்கு நிலங்கள் இவற்றை எல்லாம் உள்ளடக்கி 3500 மைல்கள் ஏழு மாதங்களாகப் பயணித்துத் திரும்பினர். சிங்கியாங்கின் அரசியல் சூழ்நிலையைப் பற்றிய செய்தி சேகரிப்பு அவர்களது இலக்காக இருந்தது.

இன்றைக்கு இருக்கும் வசதிகள் ஏதும் இல்லாத காலம். வெளி நாட்டினரின் சுற்றுலாப் பயணம் என்பதை நினைத்துப் பார்த்திருக்க முடியாத காலம். வன்முறை, கிளர்ச்சி, அரசியல் குழப்பம், உள்நாட்டுப் போர், பன்முகப் பகை, அப்பாவி மக்கள், அவ்வப்பொழுது ஏற்படும் சிக்கல்கள், பயண வழி மாற்றங்கள்,

உணவுப் பற்றாக்குறை, உடைப் பற்றாக்குறை, உறக்கமின்மை, இத்தனையையும் எதிர்கொண்டு மக்களிடம் இருந்து மக்கள் பற்றிய செய்திகளுக்காக மெள்ள மெள்ள பயணித்துச் சென்றனர் இருவரும். இறுதிக்கட்டத்தில் சைனாவின் தென் எல்லைக்கும் ரஷ்யாவின் தென் கிழக்குப் பகுதிக்கும் செல்ல நேர்ப் பாதையில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும் என்று முன் கூட்டியே கணித்தனர். அதற்கு மாற்றுப் பாதை அச்சுறுத்தும் நீண்ட பாலைவனங்களும், செங்குத்தான இமாலயக் கணவாய்களும் கொண்டது. ஆனாலும் அவ்வழியில் தடைகள் இருக்காது என்கின்ற ஒரே காரணத்திற்காக அல்லல்பட்டுப் பயணித்து ஒரு வியக்கத்தக்க சாதனையை இருவரும் செய்து முடித்தனர்.

இந்தப் பயணங்களின் அனுபவங்களையும், அந்தந்த நிலங்களின் தனித் தன்மைகளையும், பழங்குடியினரிலிருந்து சமகால மக்கள் சமூகம் உள்ளடக்கிப் பலவகைப்பட்ட மக்கட் பிரிவினரின் வாழ்க்கை முறைகளையும், ஏராளமான புகைப்படங்களுடன் எல்லா விவரித்துக் கட்டுரைகள் எழுதினார். ஒவ்வொரு பயணத்தைப் பற்றியும் ஒரு நூல் வெளியிடப்பட்டது. அதன் மூலம் எல்லாவின் வருமானம் அவர் பொருளாதாரத் தன்னிறைவொடு பயணங்களைத் தொடர்வதற்கு வழி வகுத்தது. எல்லா சிறந்த புகைப்படக் கலைஞராக இருந்தார். மேல் எழுந்தவாரியாக இல்லாமல் அவரது புகைபடங்களைப் போல் அவரது வருணிப்பு அதி நுண்ணிய விவரங்களை உள்ளடக்கி இருந்தது. ஆதலால் ஒவ்வொரு நிலப் பிரிவும் மக்கட் பிரிவும் அப்படியே படம் பிடித்துக் காட்டப்பட்டது. தனது புகைப்படத் தொகுப்புக்களின் வாயிலாக எல்லா சொற்பொழிவுகளையும் தொழில் முறையாக நிகழ்த்தினார்.

எல்லாவின் நான்காவது பயணம் அவரது வாழ்வில் ஒரு திருப்புமுனை ஆயிற்று. இம்முறை அவர் அவருடைய சிநேகிதி ஆன் மாரி ஷ்வார்ஷென்பாக்குடன் ஈரான் துருக்கி ஆஃப்கனிஸ்தான் நோக்கிப் பயணமானார். ஆன் சுவீஸ் எழுத்தாளர், பத்திரிக்கையாளர், புகைப்படக் கலைஞர். சுயேச்சையாகச் செயல்படுபவர். ஹிட்லரின் கொள்கைகளையும் அவரது ஆட்சியையும் தீவிரமாக எதிர்த்தவர். ஃபாஸிச எதிர்ப்பில் உறுதியாய் இருந்தவர். யூதர்களும், அரசியல் காரணமாக ஜெர்மனியில் இருந்து வெளியேறியவர்களும், அவருக்கு நெருக்கமானவராய் இருந்தனர். ஃபாசிச எதிர்ப்பு அணியினரின் கதைகளையும் கட்டுரைகளையும் வெளியிடத் துவங்கிய இலக்கிய ஆய்வுப் பத்திரிக்கைக்கு நிதி உதவி செய்தார் ஆன். இதனால் குடும்பத்தினரிடம் இருந்தும் பிறரிடம் இருந்தும் தனிமைப்படுத்தப்பட்டவர். ஆடவரைப் போல் உடை அணிந்து ஆடவரைப் போல் நடந்து கொள்வது அவரது இயல்பாயிற்று. பல இடங்களில் அவர் ஆண்மகனாகவே எடுத்துக்கொள்ளப்பட்டார். சற்று வித்தியாசமானவர். அவருடைய உலகப்பார்வை சோகமயமாயும் உண்மையான காதலுக்கு ஏங்குவதாகவும் இருந்தது. ஒரு விதமான மன நோயின் பிடியில் அவர் சிக்கி இருந்தார். நிவாரணம் இல்லாத மன வேதனையால் நிலை குலைந்த அவர் மார்ஃபின் போதைக்கு அடிமையாய் விட்டவர். மன அழுத்தத்தால் மார்ஃபினும், மார்ஃபினுக்கு அடிமைப்பட்டதால் மன அழுத்தமும் ஆக அவர் ஒரு நரக வேதனையில் சிக்கியிருந்தார்.

அவரை போதையின் கோரப்பிடியில் இருந்து மீட்க உறுதி பூண்டார் எல்லா. முடியாதவை எல்லாம் முடியும் என்று சாதித்த எல்லாவின் கண் பார்வையில் அவ்வப்பொழுது தப்பி ஆன் போதையில் சிக்கி மேலும் மேலும் சீர்குலைந்து சொல்லொணாது

*சித்திரவதைப் பட்டார். கொடுமையினும் கொடுமை வறுமை. அதனினும் கொடுமை மன நோயின் சித்திரவதை என்பதை எல்லா தனது கண் முன் தனது சிநேகிதி அழிந்து போவதைக் கண்டு உணர்ந்து மனம் கலங்கினார். தனது சிநேகிதியைக் காப்பற்றமுடியாது போன தோல்வியை முதன்முறை சந்தித்த அவர் மன அடக்கத்தின் முதல் அனுபவம் பெற்றார் எனலாம்.*

*ஆன் எல்லாவை விட்டுப் பிரிய நேர்ந்தது. 1942-இல் சைக்கிளில் இருந்து விழுந்ததால் அவரது தலையில் பலத்த அடி பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் அறிக்கை தவறுதலாக இருந்தது. அதன் பின்விளைவாய் சில நாட்களிலேயே மாளாத்துயரமாயிருந்த அவரது வாழ்வு முடிந்தது. தனியே பயணம் தொடர்ந்த எல்லா இந்தியாவிற்கு வந்து நேரே தமிழகத்திற்குப் பயணம் ஆனார்.*

*ஆன் உடன் செய்த பயணம் அவரை வெளிமுகத்தில் இருந்து உள்முகமாகத் திருப்பி இருந்தது. முதன்முறையாகத் தன்னை விமரிசிக்கத் துவங்கிய எல்லா இதுவரை தான் சாதனை சாதனை என்று பரந்து பட்ட உலகில் எங்கெங்கோ சென்று வந்தது எல்லாம் தனது மனதிற்கு பூரண சாந்தியைத் தரவில்லை என்பதை உணர்ந்தார். சாதிக்கச் சாதிக்க மேன்மேலும் பயணங்களைத் தேடி ஓடியதும் ஒருவகையில் தன்னை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த போதை தான் என்பதை உணர்ந்தார். தன்னைச் சுற்றி மேலும் மேலும் கட்டுக்களை உண்டாக்கிப் பிணித்துக் கொண்டிருக்கும் மனதின் போதையில் இருந்து விடுபடுவதே பூரண நிம்மதி என ஒருவாறு தெரிந்துகொண்ட நிலையில் பகவானது சன்னிதிக்கு வருவதற்கான மனப் பக்குவத்தின் முதல் நிலையை அடைந்தார்.*

# ஔவைக் குறள்

## 5. நாடி தாரணை

*பாடல் 1:*

*மூலத்தில் தோன்றி முடிவில் இருநான்காகிக்*
*கால்வெளியில் பன்னிரண்டாம் காண்*

பொருள்: வாயு தாரணை செய்வதன் விளக்கம் இது. வாழ்வானது மூலாதாரத்தில் தோன்றி ஏழு ஆதாரங்களைக் கடந்து, அனைத்தையும் தாண்டிய எட்டாவது நிலையில் தேஹ பாவனை நீத்து, துபாதசாந்தம் என்னும் பெருவெளியில் ஒன்றுகிறது.

*2. இடைபிங் கலைகள் இரேசகம் ஆற்றில்*
*அடையும் அரனார் அருள்*

பொருள்: மூலாதாரத்தில் அடங்கி உள்ள குண்டலினி சக்தியினை ரேசகம் பூரகம் கும்பகம் (மூச்சை முறைப்படி உள்ளிழுத்தல், அடக்குதல், பின் வெளிவிடுதல்) ஆகிய பிராணாயாம முறைப்படி பயிற்சி செய்தால், உடலின் வலப்புறம், இடப்புறம் மற்றும் மத்தியில் உள்ள பிங்கலை இடை வழியாக சுவாச சக்தி மேலெழும்பி, சுஷும்னா நாடி என்னும் மத்ய நாடியின் வழியாக சஹஸ்ராரம் என்னும் உச்சியை அடைந்து, இறைஅருளில் ஒன்றுபடுவோம்.

*3. அங்குலியான் மூடி முறையால் இரேசிக்கில்*
*பொங்குமாம் பூரகத்தின் உள்*

பொருள்: விரல்களால் நாசியை மூடி, முறைப்படி ரேசகம், பூரகம் (மூச்சின் உள்வாங்கல், வெளிவிடல்) செய்தால் அருள் விளங்கும்.

*4. எண்ணலி ஊழி உடம்பாய் இரேசிக்கில்*
*உள்நிலைமை பெற்றது உணர்வு*

*பொருள்: அநேக காலம் நான் யார் என ஆராய்ந்து ரேசக-கும்பக-பூரகப் பிராணாயாமம் முறைப்படச் செய்தால், இறைஉணர்வு இதயத்தின் உள்ளே மலரும்.*

*5. மயிர்க்கால் வழியெல்லாம் மாய்கின்ற வாயு*
*உயிர்ப்பின்றி உள்ளே பதி*

*பொருள்: உடலின் ஒவ்வொரு மயிர்க்கால் வழியாகவும் வெளியேறி அழிகின்ற வாயுவை, அந்தர்முக பாவனையால் மனத்தை உள்ளே திருப்பி இதயத்தே அடக்குகின்ற பாவனையால், இதயத்தே அடக்குவாய்.*

*6. இரேசிப் பதுபோலப் பூரித்து நிற்கின்*
*தராசுமுனை நாக்கதுவே யாம்*

*பொருள்: இரேசகத்தின் அறைபோல் பூரகமும் அளவாகச் செய்யின், நாக்கு தராசுமுனை போல் நடுவாய் நிற்கும்.*

*7. கும்பகத்தின் உள்ளே குறித்தரனைத் தானோக்கில்*
*தும்பிபோல் நிற்கும் தொடர்ந்து*

*பொருள்: பிராணவாயுவை உள்ளே அடக்கி, மனத்தை ஒருமுகப்படுத்தி, ஒரே நோக்குடன் 'நான் எங்கு எழுகின்றது?' என்று இடைவிடாது நோக்கில், சங்கிலியால் கட்டப்பட்ட யானை அசைவின்றி நிற்பதுபோல், மனது அசைவற்று நிற்கும்.*

*வளிஉள்ளடக்க வலைபடு புள்போல்*
*உளம் உள்ஒடுங்கும் உந்தீபற"*

*என பகவான் பிராணாயாமத்தின் மூலம் மனதை ஒருமுகப்படுத்துவதை உபதேச உந்தியாரில் விளக்குகிறார்.*

*விட்டுக் கருதலின் ஆறுநீர்வீழ்ச்சிபோல்*
*விட்டிடாது உன்னலே உந்தீபற*
*விளம்பும் தியானம்*

என மன ஒருமைப்பாட்டுடன் இடைவிடாது தியானத்தினையும் பகவான் விளக்குவதை ஒட்டி நோக்குக.

8. இரேசக பூரக கும்பகம் ஆற்றில்
   தராசுபோல் நிற்கும் தலை

பொருள்: இரேசகம் (சுவாசத்தை வெளியே விடல்), பூரகம் (சுவாசத்தை உள்ளே இழுத்தல்), கும்பகம் (சுவாசத்தை உள்ளே அடக்குதல்), இவற்றை முறைப்படி செய்தால், தராசுமுனை இரு பக்கத்திற்கும் இடையே அசையாது நிற்பதுபோல் சாதகனின் சிரம் அசைவற்று நிற்கும்.

9. வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
   ஆயுள் பெருக்கம் உண் டாம்

பொருள்: இங்ஙனம் பிராணாயாமத்தினை முறைப்படி செய்தால் ஆயுள் விருத்தி அடையும்.

10. போகின்ற வாயு பொருந்தில் சிவம்ஒக்கும்
    தாழ்கின்ற வாயு அடக்கு

பொருள்: வெளியே கட்டுப்பாடு அற்று அலைகின்ற பிராண வாயுவை இங்ஙனம் பிராணாயாமம் மூலம் அடக்கி ஒழுங்குபடுத்தினால், சாதகன் இறைநிலையை அடைவான்.

# இனிவரும் திருநாட்கள்
## 2019

| | | | |
|---|---|---|---|
| மே | 2 | வியாழன் | ஸ்ரீ பகவான் ஆராதனை |
| மே | 28 | செவ்வாய் | மஹா பூஜை |
| ஜுலை | 13 | சனி | பசு லக்ஷ்மி தினம் |
| | 16 | செவ்வாய் | குரு பூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | ஞாயிறு | அருணை விஜய தினம் |
| | 29 | ஞாயிறு | நவராத்திரி விழா தொடக்கம் |

# அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம்

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

***பகுதி 14***

*இன்பம் என்பது எது?*

*அதை அடைவது எப்படி?*

*இவை இரண்டும் காலங்காலமாக மனித இனத்தை பாதிக்கும் கேள்விகள். காட்டுமிராண்டியாகத் துவங்கி, குகை மனிதனாகி வளர்ந்து, சிறிது சிறிதாக நாகரீக வாழ்க்கையில் முன்னேறத் துவங்கியபோது இந்தப் பிரச்சினை அதிக முக்கியத்துவம் பெற்றது. வெற்றியும் புகழும் செல்வமும் இன்பத்தை அளிக்கவில்லை என்ற ஞானம் அவனைச் சிந்திக்க வைத்தது. இதுவே பல தத்துவங்களுக்கும் காரணமானது.*

*இது பற்றிய சிந்தனைகள் மேலை நாடுகளில் பரவலாகப் பேசப்படுகின்றன. மேற்கத்திய சிந்தனைகள் பல கிரேக்க நாட்டிலேயே தோன்றின. Epic of Gilgamesh என்னும் நூலின் புராதன பாபிலோனிய பதிப்பில், சிதூரி என்பவர் சொல்கிறார், 'உணவால் தேகத்தை நிரப்பிக் கொள்ளுங்கள்; இரவும் பகலும் இன்ப நுகர்ச்சியில் கழியட்டும்; நாள் முழுவதும் சுகமாக இருங்கள்; நடனமும் பாட்டும் நிரம்பி வழியட்டும். இதுவே மனித வாழ்வின் குறிக்கோள்.'*

*இதுவே ஹெடானிசம் (Hedonism) என்னும் தத்துவத்தின் நுழைவாயிலாக அமைந்தது. இன்பம் துய்த்தலும், பௌதிக சுகங்களுமே வாழ்வின் பிரதான*

நோக்கம் என்பது இவர்கள் தீர்வு. துன்பத்தைக் குறைத்து இன்பத்தை மேம்படுத்துவதே இதற்கான வழி.

சுமேரிய நாகரிக காலத்திலேயே இது பற்றிய பல கருத்துகள் வழக்கிலிருந்தன. இதன் மாறுபட்ட வடிவம் எபிக்யூரியனிசம் *(Epicureanism)* என வழங்குகிறது. இது பயமற்ற அமைதியான எளிய வாழ்வில் அளவான இன்பம் காண்பது சிறந்தது என்று வலியுருத்தியது.

ஆனால் இதற்கு மாறாக, சாக்ரடீஸ் போன்றவர்கள் இன்ப வாழ்விற்கு உயரிய வடிவங்களை கண்டார்கள். 'மகிழ்ச்சியின் ரகசியம், மேலும் மேலும் ஆசைகளை நிறைவேற்றுவதில் இல்லை. எளிமையில் இன்பம் துய்ப்பதே உண்மையான ஆனந்தம்.' அது வெளியிலிருந்து அடையப்படுவதல்ல; அது அகத்தே உணரப்படுவது என்பதே அவர்கள் கண்ட உண்மை. *("The secret of happiness, you see, is not found in seeking more, but in developing the capacity to enjoy less.")*

சீன தேசத்து அறிஞரான கன்ஃப்யூஸியஸ், உயர்ந்த சிந்தனைகளே உலகை உய்விக்கும் என்று கருதினார். இவருடைய கருத்து இக்கால 'பாஸிடிவ் திங்கிங்' என்னும் கருத்துக்கு ஆதாரமாக இருந்தது. மனோஅழுத்தம் என்னும் நோயால் முடங்கிப் போகும் சமகால நடுத்தர வயதினருக்கு இக்கருத்தின் அடிப்படையில் பல போதனைகள் நடைபெறுகின்றன.

ஆனால், இந்த மேற்கத்திய சிந்தனைகள் தோன்றும் முன்னரே, நம் நாட்டில் இன்பத்தைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்கலாயிற்று. இந்து மத நூல்கள் இதை இரண்டாகப் பிரித்தன. ஒன்று, புலன்களால் உணரப்படும் இன்பம். இது சாதாரணமானது; அழியக்கூடியது என்பதால் அதைச் சிற்றின்பம் என்று வகுத்தனர். அதற்கு மகிழ்ச்சி, இன்பம், சுகம் எனப்

*பல பெயர்கள் சிறு சிறு பேதங்களுடன் வழக்கத்தில் வந்தன. இவை யாவும் இரண்டு எதிர்மறையான நிலைகளைக் கொண்டவை. இன்பம் துன்பம், மகிழ்ச்சி, துயரம், சுகம், துக்கம் என்னும் இருமை நிலைகள் இந்த உணர்வுகளின் தாற்காலிகத் தன்மையை எடுத்து உரைகின்றன. இவை நமக்கு வெளியே நடக்கும் செயல்களின் காரணமாக அமைகின்றன. இதற்கு நம்முடைய வினைப்பயனே காரணம் என்று அவர்கள் வலியுருத்தினர். பூர்வ ஜன்மங்களில் செய்யப்பட்ட கரும பலன் விடாது நம்மைத் துரத்தும் என்று உணரப் பட்டது. இதற்கு ஊழ்வினை என்ற பெயர் சூட்டப் பட்டது. கடைச் சங்க காலத்து நூலான சிலப்பதிகாரம் இதன் முக்கியத்துவத்தை முன்னிறுத்துகிறது. அந்நூலின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாக 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்னும் தத்துவத்தை இளங்கோ அடிகளார் வலியுறுத்துகிறார்.*

*இந்தக் கரும பலன் பல பிறப்புகளில் நம்மை விடாது தொடருகிறது. இந்த பந்த பாச வலைகளிலிருந்து விடுபடுவதே நிரந்தரமான ஆனந்தத்திற்கு வழி என்று ஞானிகள் உணர்ந்தனர். அதையே அழிவற்ற பேரின்பம் என்று உபதேசம் செய்தனர். இதுவே இன்பத்தின் இரண்டாவது பரிமாணம். உபநிஷதங்கள் கண்ட ஒளி மயமான மார்க்கம். பௌதிகமான சுகத்திலிருந்த ஆத்யாத்மிகமான இன்பத்தை அடைய வேதாந்த மார்க்கமே சிறந்த வழி. இந்த நிலையை அடைந்தவன், கீழே வருவதில்லை. அவன் தனக்குள்ளே பரம்பொருளைக் காண்கிறான். அவனுக்கு தத்துவ நூல்கள் 'ஸ்வராட்' என்னும் அழகிய நாமத்தை சூட்டி அழகு பார்க்கின்றன. அவன் தன்னை முழுவதும் ஆளும் பேராண்மை படைத்தவன். தனக்குத் தானே தலைவன். அவன் இருமைகளுக்கு அப்பாற்பட்டவன். அவனைச் சம காலத்து மக்கள் ஞானியென்றுகூட உணரமாட்டார்கள். அவன் வெளி உலகத்*

தொடர்புகளிலிருந்து தன்னை விலக்கிக் கொள்கிறான். (மஹாபாரதத்திலுள்ள 'சனத்சுஜாதீயம்' என்னும் நூலில் இக்கருத்துகள் காணப் படுகின்றன) அவனே ஸ்திதப்ரக்ஞன். 'துன்புற்றவன் இறந்த காலத்தில் வாழ்கிறான். பேராசை பிடித்தவன் எதிர் காலத்தைப் பற்றியே சிந்தக்கிறான். நிம்மதியான உள்ளம் படைத்த ஒருவனே நிகழ் காலத்தில் வாழ்கிறான்' என்று சீன அறிஞன் ஒருவன் கூறுகிறான்.

இதற்கு மாறாக, இந்திய தத்துவ உலகில் சிற்றின்பத்தை மட்டுமே பிரதானமாகக் கொண்ட 'சார்வாக' மதங்களும் உதித்தன. அவை பௌதிக சுகத்தையே நிரந்தரமான சுகம் என்று வாதாடின. வேதங்களின் உன்னத கருத்துகளை அவை ஏற்க மறுத்ததால் அவை நாஸ்திக மதம் என வழங்கப்பட்டன. இக்கருத்துகள் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பிரபலமடையத் துவங்கின. மக்களிடையே பழக்க வழக்கத்தில் காலூன்றத் துவங்கிய இந்த நிலைபாடுகள் 'லோகாயத' என அழைக்கப்படும்.

சார்வாக தத்துவத்தின் வளர்ச்சிக்கு சில காரணங்கள் இருந்தன. வேதங்கள் கரும மார்க்கத்தைப் பிரதானமாகக் கொண்டவை. உபநிஷதங்கள் ஞான மார்க்கத்தை முன்னிறுத்தின. பின்னர் தோன்றிய புத்த மதம் உருவ வழிபாட்டிற்கும் ஏனைய அநுஷ்டானங்களுக்கும் எதிர் முகாம் அமைத்து, சனாதன தர்மத்திற்கு முற்றும் மாறுபட்ட புதிய தத்துவங்களைப் பரப்பத் துவங்கின. முதலில் சாமானிய மக்கள் இந்தத் தத்துவ அலைகளில் தள்ளப்பட்டு சற்றே குழப்பமடைந்தனர். வழிவழியாக வந்த கோட்பாடுகள் சரியா, தவறா என்னும் ஐயம் அவர்களிடம் எழத் துவங்கியது. இந்தச் சூழலில் புலன் வழி துய்க்கும் சிற்றின்பம் மட்டுமே உயர்ந்தது என்னும் அழகிய வார்த்தைகள் அவர்களைக் கவர்ந்தன. 'சார்வாக்' என்றால் அழகிய வார்த்தைகள் (சாரு

*+ வாக்) என்று பொருள். இந்த வாழ்க்கை முறை சுலபமானது. குறுகிய காலத்தில் மகிழ்ச்சி அளிக்கக் கூடியது. அதனால் சிலர் அந்த வழியில் செல்லத் துவங்கினர். ஆனால் வழிவழியாகத் தோன்றிய ஞான, பக்தி, கரும மார்க்கங்கள், இந்தப் புனித மண்ணில் ஆழங்கால் பட்டு அமைந்த காரணத்தால் இந்த நாஸ்திக வாதங்கள் குறுகிய காலத்திலேயே அழிந்து போயின. பின்னர் ஆதிசங்கரர் போன்ற மகான்கள் நமது வேதாந்த கருத்துகளை மக்களிடைய அறிவுபூர்வமாக பரப்பி மாற்று மதத்தினரை வாதங்களில் வென்றனர். இவர்களின் பெரு முயற்சியால் பௌத்தமும் சார்வாக மதமும் இங்கு வேரூன்ற இயலவில்லை.*

*சிற்றின்பம் என்பது அழியக்கூடியது; அழியாத தத்துவம் பேரின்ப மயமானது என்னும் வாதம் சாந்தோக்கியம், பிரம்ம சூத்திரம் போன்ற இந்திய தத்துவத்தின் ஆதார நூல்களில் காணக்கிடைகிறது. இதற்கு உலகியல் இன்பங்களைத் தியாகம் செய்வது அவசியமாகிறது. 'த்யாகேன ஏகேன அம்ருதத்வம் ஆனசு:' என்று வரிகள் அழிவற்ற ஆனந்தத்திற்கு லௌகீக இன்பங்களைத் துறத்தல் அத்தியாவச்யம் என்பதை உணர்த்தும். ஈசாவாஸ்ய உபநிஷதமும், பற்றுகளை நீக்குதலின் முக்கியத்துவத்தை அழுத்தமாக வலியுறுத்துகிறது. (தேன த்யக்தேன புஞ்சீதா:). இறைவனுக்கு என் எல்லா செயல்களும் அர்ப்பணம் என்பது நம் சித்தாந்தத்தின் அடிப்படை. இதை ஒட்டியே 'சர்வம் க்ருஷ்ணார்ப்பணம்' (எல்லாம் இறைவனுக்கே) என்ற சிந்தனை மேலோங்கியது. இதை ரத்தின சுருக்கமாகச் சொல்லும் திருமந்திரம்.*

***ஆனந்தம் சிவாய; அறிவார் பலர் இல்லை;***
***ஆநந்தமோடும் அறிய வல்லார்கட்கு***
***ஆநந்தக் கூத்தாய் அகப்படும் தானே***

*சிவனுக்கு என்று சீவன் தன் செயல்களையெல்லாம் அர்ப்பணித்தால், துன்பமேது? உண்ணும் உணவு, பருகு நீர், தின்னும் வெற்றிலை, என்று அத்தியாவசியத் தேவைகளையும், அவற்றினூடே போக்யமான வஸ்துக்களையும்கூட இறைவனுக்கே என்று அளித்து அமைவது மனசாந்திக்கு உறுதுணையாக அமையும்.*

*நம்மிடையே பலதரப்பட்ட மாந்தர்கள் உள்ளனர். வசதி மிக்கவர் வசதி குறைந்தவர், ஆரோக்கியம் படைத்தவர் நோயில் தவிப்பவர், உற்றமும் சுற்றமும் புடை சூழ வாழ்பவர் தனிமையில் தவிப்பவர், என்று வித்தியாசமான நிலையில் உள்ளவர்களையே நாம் பார்க்கிறோம். இந்தக் கணக்கில் வசதியும் ஆரோக்கியமும் உறவும் உள்ளவர்கள் மகிழ்ச்சியோடும், ஏனையோர் துயரத்தோடும் வாழ்பவர் என்று கொள்ள வேண்டும்.*

*ஆனால் உண்மை நிலை அப்படி அமைவதில்லை.*

*ஏன்?*

*நண்பர் ஒருவர் ஒரு கார் விபத்தில் துரதிர்ஷ்ட வசமாக சிக்கிக் கொண்டார். பலத்த காயம். அந்தச் சூழலிலும் அவர், 'நல்ல வேளை, கண்ணில் அடிபடவில்லை. இங்கு டாக்டர், நர்ஸ் எல்லோரும் நன்கு கவனிக்கிறார்கள். இன்னும் ரெண்டே வாரத்தில் டிஸ்சார்ஜ் பண்ணிவிடுவார்கள்' என்று அந்த வலியினூடேயும் சிரிப்புடன் சொன்னார். வெளியே மற்றொருவர் மிகுந்த துயரத்தோடு இருந்தார். 'அக்கிரமமாக இருக்கு. இன்-பேஷண்டா இருந்தாத்தான் கம்பெனி ரூல்ஸ் படி ஆஸ்பத்திரி செலவை ரீயிம்பர்ஸ் பண்ணுவார்களாம். எனக்கு வெளி காயம்தான். அதனால அவுட் பேஷண்டாத்தான் சிகிச்சை அளிப்போம் என்கிறார்கள். நம்ம லக் இப்படித்தான்.'*

*கொஞ்சம் கற்பனைக் கதைதான். ஆனால் எங்கும் நல்லதையே பார்ப்பவர் எங்கும் ஏமாற்றத்தையே*

காண்பவர் என்ற மேற்கண்ட இருவித மாந்தரை நாம் காண்கிறோம். மிகுந்த துன்பத்திலும் 'எல்லாம் இறைவன் செயல்' என்று நிம்மதியோடு இருப்பவர்களும் உண்டு. 'நல்ல வேளையாக வெளி காயத்தோடு தப்பினோமே' என்று உணராமல், எங்கும் குறைகாண்பவரும் உண்டு. இதை பாஸிடிவ் நெகடிவ் மனப்பான்மை என்று பொதுவாக குறிப்பிடுகிறோம். இதற்கு அவரவர் மனப்பாங்கே காரணம். 'மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' என்று வள்ளுவர் அழகாக குறிப்பிடுவார்.

இந்தக் கட்டத்தில்தான் சித்தாந்தங்கள் நமக்குத் துணை புரிகின்றன. திருமூலரின் ஆனந்தம் சிவாய என்னும் வரிகள் நோக்கத்தக்கவை. சிவாய என்ற சொல்லுக்கு 'சிவனுக்கு' என்று பொருள். 'நம சிவாய', 'நமோ நாராயணாய' என்னும் சொற்களிலும் இந்த 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபைக் காண இயலும். சிவனுக்கு என்று எதையும் எல்லாவற்றையும் எப்பொழுதும் சமர்ப்பணம் செய்தால் நமக்குக் கிடைப்பது அளவற்ற ஆனந்தம். இந்த முறையில் நாம் நம்முடைய கடமைகளை முழு முனைப்புடன் செய்வோம், ஆனால் கர்ம பலனைக் கருத மாட்டோம். கடமையையே கருத்துடன் செய்து, அதன் பலனை எண்ணிப் பதற்றமடையாமல் இருப்பதே பகவத் கீதை கண்ட உயர்ந்த வழி. நம் தத்துவத்தின் அடிப்படை.

கர்மத் தியாகம் (செயல்கள் அனைத்தையும் துறத்தல்) என்பது உலகியலில் ஈடுபட்டு அல்லலுறும் நமக்கு சாத்தியமன்று. உழைத்தலும், பொருள் ஈட்டலும், குடும்ப சம்ரக்ஷணமும், உறவுகளும், பந்தபாசங்களும் நமக்கு இன்றியமையாதவை. ஆகையால் கர்மத் தியாகம் இயலாது. ஆனால் இன்பதுன்ப இருமையில் நம்மை வீழ்த்தும் இந்த கருமங்கள் நம் வாழ்வை சஞ்சலத்தில் நிரந்தரமாகத் தள்ளுகிறது என்பதையும் உணர்கிறோம். இதிலிருந்து மீள என்ன வழி?

இதற்கு மாற்றுதான் ‘சிவாய’ என்னும் மந்திரம். அறிவைத் தீட்டி, மனதைச் சற்று தெளிவுபடுத்தி வேதாந்த வழியில் சிறிது தூரம் பயணித்தால், கர்மபலத் தியாகம் எவ்வளவு அவசியம் என்று புலப்படும். ‘செயலை நலமுறச் செய்; அது உன் கையில் இருக்கிறது. பலனைப் பற்றி சிந்திக்காதே.; அது உன் வசம் இல்லை.’ என்பதே கர்மபலத் தியாகம் என்னும் தத்துவத்தின் விரிவாக்கம். இதை வேதாந்த வழியாக உணர்வது ஞான மார்க்கம். வழிபாட்டின் மூலம் தெளிவது பக்தி. இரண்டுமே ஏற்றமிக்கவை.

இந்த மார்க்கத்தை ராமலிங்க அடிகளார் சொல்லும் பாங்கே அழகு. முதல் நிலையில் மனப் பக்குவம் அடையாத சீவனின் மனம் படும் துன்பத்தை இவர் விளக்குகிறார்.

*பட முடியாதினித் துயரம் படமுடியா தரசே*
*பட்டதெல்லாம் போதும் இந்த பயந்தீர்த்திப் பொழுது...*
*நடன சிகாமணியே என் நவமணியே! ஞான*
*நன்மணியே பொன்மணியே! நடராச மணியே!*

துயர் என்னும் இருள் சூழ்ந்த பயங்கரமான இந்த வாழ்விலிருந்து விடுபட இறைவனிடம் மன்றாடுகிறார். அப்பெருமானுக்கு இறைவன் அருள் கிடைகிறது. உள்ளத்தில் ஆனந்தம் கிளர்ந்து எழுகிறது. இதோ பாட்டும் வருகிறது.

*படமாட்டேன் துயர் சிறிதும் படமாட்டேன் இனி நான்*
*பயப்படவு மாட்டேன் பதத்துணையே பிடித்தேன்*
*விடமாட்டேன் ஏமாந்து விடமாட்டேன் கண்டீர்*
*.... நல்ல திருவருளாலே நன்றானேன் நானே*

நல்ல திருவருளாலே நான் நன்றாக ஆனேன் என்று மார்தட்டுகிறார். என் உடல் உயிர் ஆகிய அனைத்தையும் எடுத்துக்கொண்டு, உன் உடல் ஆவியை அளிப்பாய் என வேண்டுகிறார். இந்த ஆநந்த நிலை எதனால் கூடிற்று? இறைவனருளால்

மட்டுமே இந்தப் பரிமாற்றம் நடைபெறுகிறது என்பது கண்கூடு. காரைக்கால் அம்மையார் அழகிய தன் பெண்ணுருவத்தை அழித்து மக்கள் காண அஞ்சும் பூத உடலுடன் இறைவன் திருநடனத்தை நள்ளிரவில் கண்டு களிப்படைகிறார். இது அடிகளார் சொன்ன முறையில், அவருக்குக் கிடைத்த 'நல்ல திருவருள்'. 'காடுடைய சுடலைப் பொடி பூசிய' அந்த சிவன், காரைக்கால் அம்மையார் உள்ளத்தை மட்டுமல்ல, பச்சிளம் குழந்தையான சம்பந்தப் பெருமான் மனதையும் கவருகிறான். (சுடுகாட்டு சாம்பலைப் பூசி என் உள்ளம் கவர்ந்த கள்வன் என்பது சம்பந்தரின் அநுபவம்). இந்த நிலையில் அவர் பூரித்துப் பாடிய பாடல்கள்தான் நமக்கெல்லாம் வழிகாட்டியாக அமைகின்றன. இறைவன்பால் காதல் கொண்டு, மனம் கசிந்து கண்ணில் நீர் மல்க அவனிடம் தஞ்சம் புகுவதே பேரின்பம். இதுவும் 'நல்ல திருவருள்'.

இத்தகைய ஒரு கருத்தினை ரமண மாமுனியும் சொல்லுவார்.

*பௌதிகமாம் உடல் பற்று அற்று நாளும் உன்*
*பவிசு கண்டுற அருள் அருணாசலா*

*(அக்ஷரமணிமாலை 75)*

புலன் வழி சென்று உலகியல் இன்பங்களில் உழன்று, வழி தெரியாமல் திக்கித் திகைக்கும் எனக்கு அருளைக் கொடு என்று அருணாசலம் உறையும் பெருமானிடம் இறைஞ்சுகிறார் மாமுனி. பௌதிகமான உடல் பற்று நம்மைக் கருமங்களில் செலுத்துகிறது. அதனின்றும் விடுபட 'உன் பவிசு கண்டுற அருள்' என்ற வேண்டுதல் வைக்கப் படுகிறது. அதென்ன 'பவிசு'? இறைவன் ஞான வடிவாக நின்று நம்மை அணைக்கிறான். அவன் நாமம் நம்மை உய்விக்கிறது. அவன் குணங்கள் நம்மை ஆட்கொள்கின்றன. அவனுடைய அழகிய அர்ச்சா மூர்த்தி வைசிஷ்ட்யம் நம்மைக் கவருகிறது. இவ்வாறு

ஞான நாம குண ரூப வைபவத்தால் நம்மை அவன் கவர்கிறான். இதுவே அவன் பவிசு. ஆதிபௌதிகம் (நம்மை சுற்றியுள்ள சக்திகள்), ஆத்யாத்மிகம் (நம்மை உள்ளிருந்து ஆட்டுவிக்கும் ஆத்ம சக்தி) என்னும் தளைகள் இரண்டும் பகவான் சொன்ன பௌதிகமாம் உடல் பற்றுக்குக் காரணம். இதை நீக்கும் சக்தி படைத்தவன் அண்ணாமலையான் ஒருவனே.

அந்த அருள் கிடைக்கப் பெற்றதை அடுத்த பாடலில் பார்க்கலாம்.

மலைமருந்து இட நீ மலைத்திடவோ அருள்
மலைமருந்தாய் ஒளிர் அருணாசலா

(அக்ஷரமணிமாலை 76)

அஞ்ஞானம் என்பது நம் அறிவை மறைக்கும் 'திரோதானம்' என்னும் மாயை. இதுவும் இறைவன் செயலே. இது நமக்கு பெரும் குழப்பத்தை அளிக்கிறது. நாம் உய்ய வழியுண்டா என்னும் மலைப்பை அளிக்கிறது. இந்த மலைப்பு நீங்க மெய்ஞ்ஞானம் என்னும் அருளை அளிப்பவனே மலைமகள் கரம் பற்றிய மகேசன். அவன் அளிப்பது மலைமருந்து. இதில் மற்றொரு அழகும் உண்டு. மலைகளில் சிறந்தது, ஞானமே வடிவான அருணாசலம். இந்த மலைவாழ் ஈசன் அளிக்கும் ஆத்யாத்மிகமான மருந்து, இக லோகத்தில் வாழும் நம் மலைப்பைப் போக்கி விவேகத்தை நமக்கெல்லாம் அளிக்க வல்லது. மேலும் மருந்தை அளிப்பவன் வைத்தியன். இவனோ, வைத்தியர்களுக்கெல்லாம் தலைவனான வைத்தீஸ்வரன். மருந்தும், வைத்தியமும், வைத்தியரும் அவனே. (பேஷஜம் பிஷக் என ஶ்ரீருத்ரம் அவனைப் போற்றுகிறது). இந்த மருந்து கிடைத்த பின்னர் எனக்கு மலைப்போ திகைப்போ எதுவும் இல்லை. எனவே மலைமருந்து அவனிடமன்றி வேறு எங்கு கிடைக்கும்?

மிக அழகிய பாடல். இங்கு மலை என்னும் சொல் மூன்று முறை வருகிறது. முதல் மலை மலைத்திருக்கும் சீவன். இரண்டாம் மலை அருள் பாலிக்கும் அண்ணாமலை. மூன்றாம் மலை இறைவனுக்கே விஷம் பாதிக்காமல் தடுத்து, நீலகண்டனை 'ஶ்ரீகண்டனாகிய' மலைமகளாகிய அந்தப் பராசக்தி. மலைமருந்து என்னும் சொல்லும் இரு முறை வருகிறது. மலைத்திருக்கும் எனக்கு மருந்து இறைவனே என்பது முதல் மலைமருந்து. அந்த மலையே மருந்து என்பது இரண்டாம் மலைமருந்து. திருவண்ணாமலை செல்லும் பேறு பெற்றவர்களே இதை உணரும் பேறு பெற்றவர்கள் ஆவர்.

75ஆம் பாட்டில் அவன் பவிசு பற்றிக் குறிப்பிட்ட மகரிஷி, இங்கே அதற்கு விளக்கத்தை 76ஆம் பாடலில் காட்டுகிறார். பகவானின் வாக்குதான் எத்தனை சக்தி படைத்தது.

ஒரு சந்தேகம் எழுகிறது. சம்சார சாகரத்தில் இழுக்கப்பட்டு திசை தெரியாமல் சுழலும் என்னைப் போன்ற சிறியோனை, ஒளிவடிவமான பரம்பொருள் கடாட்சித்து அவன் 'மலை மருந்தை' அருளுவானா? அது ஞானிகளுக்கும் இறைவன்பால் சித்தத்தை வைத்த அடியார்களுக்கும் அன்றோ கிட்டும்? இது நம் போன்ற பாமரர்களின் கேள்வி. இதற்கு பாரதி மிக சுருக்கமான வரிகளில் விடை காண்கிறான்

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் அதை
ஆங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்திரிகிட தத்திரிகிட தித்தோம்

ஆழமான கவிதை. கடினமான உருவகம். ஒன்றுக்கும் மேற்பட்ட வகையில் பொருள் காணக்கூடிய தத்துவம். 'அக்கினிக் குஞ்சொன்று' என்பது ஞானாக்னி. இது

புதர்களும் கொடிய வனவிலங்குகளும், விஷச் செடிகளும் நிரம்பிய காடாகிய சம்சார சாகரத்தில் துன்புற்றுக் கிடக்கும் நம் உள்ளத்தில் ஏற்றப்படுகிறது. அந்த வெப்பத்தில் காடு அழிந்து போகிறது. நம் வினைகள் பொசுங்கி அழிகின்றன. ஆனந்தமயமான சிவயோகம் கிட்டுகிறது. இதை வைப்பவன் யார்? நம்மை உய்விக்க வந்த பரமன். அவன் அதை வைத்த பொந்து நம் உள்ளம். அதை சுற்றிலும் உள்ள மலங்கள் அழிய, சிவம் என்னும் சோதியே நிற்கிறது. பிறகென்ன, ஆநந்தக் களியாட்டம்தான். இதைத்தான் 'தத்திரிகிட தத்திரிகிட தித்தோம்' என்று பாரதி குறிப்பிடுகிறான். 'அவன் ஞானி, அதனால் உயர்ந்தவன்; இவன் அஞ்ஞானி அதனால் தாழ்ந்தவன்' என்று அந்த அக்னி பேதம் பார்ப்பதில்லை. அதனால் அவன் சொல்கிறான் 'தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?' இதில் நம் பங்கு அவன் அக்கினியை வைக்க ஏற்றதான பொந்தாக அமைவதுதான். அதற்கு நாம் சிறிது முயற்சி செய்து நம்மை அறிய வேண்டும். உலகப் பற்றுகளின் பாற் சாராமல், பரம்பொருளான அவன் பக்கம் சார வேண்டும்.

இதை விளக்குகிறார் அகப்பேய் சித்தர். சிறந்த ஞானியாகத் திகழ்ந்த இவர் பேயாக அலையும் மனதை கட்டுப் படுத்தியவர் ஆதலால் அகப்பேய் சித்தர் எனப்படுவர். அவர் 'தன்னை அறிதல்' என்பது பேரின்பப் பெருவாழ்வுக்கு சிறந்த வழி காட்டி என்பதை விளக்க,

தன்னை அறிய வேணும், சாராமற் சாரவேணும்,
பின்னை அறிவதெலாம் பேயறிவாகுமடி

என்று உரைப்பார்.

மற்றைய நம்முடைய சிற்றறிவெல்லாம் நம்மை விட்டு நீங்கும் போது அந்த அக்னிக் குஞ்சு நம்முடைய அறியாமையாகிய காட்டை அழித்து, அறிவுக் கனலை

*ஏற்றி வைக்கிறது. அந்த ஒளியே பரம்பொருள். இதை கீதாசாரியன் 'ஞானதீபேன பாஸ்வதா' என்கிறான். இந்த பாதையில், இறைவனை அறிதலைவிட, நம்மை நாமே அறிதலே முக்திக்கு வழியாகிறது. இதற்கு நான் யார் என்னும் விசாரமே சிறந்த வழி.*

*ஆனந்தம் சிவாய என்னும் திருமந்திர வரிகளைப் பார்த்தோம். அதில் நான்காம் வேற்றுமை வடிவில் சிவனுக்கு என்ற பொருள் வருகிறது. இதுவே நான் என்னும் விசாரத்திற்கு வழி காட்டி. இதையே சற்று விரிவு படுத்தினால், மற்ற வேற்றுமைகளும் இந்த சிவனிடம் ஒடுங்குவதையே குறிப்பிடுவதைக் காணலாம்.*

*முதல் வேற்றுமை சிவன் என்னும் பரம்பொருள். இதை உணர்வதே ஞானத்தின் முதல் படி.*

*இரண்டாம் வேற்றுமை ஐ என்னும் உருபு சிவனை அடைதல் என்னும் கருத்தை சொல்லும். அவனை என்று சொல்லும்போது, மற்றைய இச்சைகள் மறைகின்றன. '(மற்றுப் பற்று எனக்கின்றி நின் பாதமே மனம் பாவித்தேன் என்று சுந்தரர் கதறுகிறார்)*

*மூன்றாம் வேற்றுமை ஆல், ஒடு, உடன் என்னும் உருபுகள் சிவனால், சிவனோடு, சிவனுடன் என்னும் கருத்துகளைக் குறிக்கும். சிவ தோத்திரங்கள் பல 'சிவேன சஹ மோததே' (சிவனுடன் உறைதல்) என்னும் சாயுஜ்ய நிலையை விவரிக்கும். இதுவே பேரின்ப நிலை.*

*நான்காம் வேற்றுமை இதை முன்பே பார்த்தோம். அனைத்தையும் சிவார்ப்பணம் என்று செய்தல் மமகாரத்திலிருந்து நம்மை ரக்ஷிக்கும். இதுவே சரணாகதித் தத்துவம்.*

*ஐந்தாம் வேற்றுமை சிவனிடமிருந்துதான் நாம் எல்லாம் பெற்றோம். நம் செயல் எதுவுமில்லை. இது*

அஹம்காரம் நீங்க அருமருந்து. நான் வெறும் நிமித்தம்; செய்பவன் அவனே என்பது ஆழ்ந்த வேதாந்த விசாரம். (நிமித்தமாத்ரம் பவ சவ்யசாயின் பகவத் கீதை)

ஆறாம் வேற்றுமை சிவனுடையதுதான் இவ்வுலகு. உலகெலாம் உணர்ந்து என்று போற்றப்படுபவன் அவன். இந்த அறிவு, அவனை நமக்கு நெருங்கியவனாகச் செய்து விடுகிறது. அவன் படைத்தவன். நம்மை ரக்ஷிப்பவனும் அவனே என்பது துன்பத்திலிருந்த விடுபட சிறந்த வழி.

ஏழாம் வேற்றுமை சிவனிடம் அல்லது சிவனில் நம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டால், சரீரம் சரீரி என்னும் தத்துவம் விளங்கும். இந்த நிலையில் அவன் அக்கினிக் குஞ்சை நம் இதய பொந்தில் வைத்து சம்சாரக் காட்டை அழிக்கிறான். நாம் தகராகாசம் என்னும் ஒளி நிரம்பிய வெளியில் அமைகிறோம்.

எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை வேறு பற்றுகள் நீங்கிய நிலையில் அவனையே நாம் ‘அம்மையே, அப்பா, ஒப்பிலா மணியே என்று அழைக்கிறோம். அவன் நாமம் நம்மை ஈர்க்கிறது. அவன் தலைப் படுகிறோம்.

தமிழ், வடமொழி இந்த இரண்டிலும் எட்டு வேற்றுமைகளும் ஒரே வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இலக்கண அமைப்பும் நம்மை இறைவனிடமே அழைத்துச் செல்கிறது.

எட்டு வேற்றுமைகளும் மொழியை செம்மைப் படுத்துகின்றன. அது மட்டுமல்ல. அவை நம் மனதையும் செம்மைப் படுத்துகின்றன, என்பது கண்கூடு.

வேற்றுமையில் ஒற்றுமை!!

(வளரும்)

# புகழுடன் ஓங்கி நிற்பார்
## (பேராசிரியர் சுவாமிநாதன்)

### ஆசிரியர் ராம் மோஹறன்

சைவ வைணவ இலக்கியங்களில் இறைவனின் திருத் தொண்டர்களான நாயன்மார்களைப் பற்றியும், ஆழ்வார்களைப் பற்றியும் அவர்தம் எளிமை, பக்தி, அடக்கம், கவித்திறன் எளியார்க்கு இரங்கும் நல்லுள்ளம், கொடைத்திறன் ஆகியவை குறித்து சிறப்பாகக் கூறப்படுகிறது. சென்ற நூற்றாண்டில் தோன்றிய ஞானக் கதிரவனாம் பகவான் ரமண மஹறரிஷிகளின் அடியார்களிலும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற ஆன்மிக உயர்வுபெற்று ஒளிர்ந்த அடியவர்களுள் சிறப்பிடம் வகிப்பவர் பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்கள். அவர் அருணாசலத்தில் ஒன்றிக்



கரைந்து கால் நூற்றாண்டுகள் கடந்த இத்தருணத்தில் அவர்தம் உயர்வினையும் அளவிடற்கரிய பக்தியையும் நம்முள் மீண்டும் பதிப்பதே அவருக்கு நாம் செய்யும் வந்தனம் ஆகும்.

நாயன்மார்களுடன் ஒப்பிடுங்கால், அப்பூதி அடிகளார் ஞானசம்பந்தர் போன்று பகவான் அடியவர்கள் அனைவரும் ஒன்றெனக் கருதி பேதமற்ற உயர் உள்ளம் படைத்து வாழ்ந்தவர் பேராசிரியர். அவர்தம் முன்னிலையில் அரசனும் ஒன்றே; ஆண்டியும் ஒன்றே. சாதி வேற்றுமைகள் மிகுந்து இருந்த சென்ற நூற்றாண்டில் விமர்சனங்கள் அனைத்தையும் எதிர்கொண்டு, திருக்குலத்தார் ஒருவரைப் பல்லாண்டுகள் தனது அணுக்கத் தொண்டனாய்க் கொண்டு, அவர் கையால் சமைத்த உணவையும் உண்டு வாழ்ந்தவர் பேராசிரியர். ராமலிங்க வள்ளலார் கூறுவதுபோல இறைவன் இருக்கும் இடம் எது என்ற வினாவிற்கு விடையாக

*எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்*
*தம்உயிர்போல் எண்ணி உள்ளே*
*ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்*
*யார் அவர் உள்ளம்தான் சுத்த*
*சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்*
*இடம்.....*

என்று சுட்டுகிறார். அங்ஙனம் எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி வாழ்ந்த பேராசிரியரின் உளம்தான் அருணாசலன் எழில் நடமிடும் இடம்.

மிக்க கருணையும் அன்புள்ளமும் கொடை பேராசிரியர் அடக்கத்தின் சிகரம். அவர் வாழ்வின் பல்வேறு நிகழ்வுகள் இதற்கு எடுத்துக்காட்டாய் அமைகின்றன. உதாரணமாக, மிகப் புகழ் பெற்ற ராஜாஜி அவர்களின் ராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் பேராசிரியர்தான் என்பதை

*மிகச் சிலரே அறிவர். அந்த மொழிபெயர்ப்பு நூலில் அவர் பெயரையே குறிப்பிட மறுத்து விட்டார். அது மட்டுமல்ல. இந்திய நூல் வரலாற்றில் ஓர் இமாலய சாதனையாக வெளிவந்தது மகாத்மா காந்தியின் நூல் தொகுப்பு. இதன் தொகுப்பாசிரியராக பிரதமர் நேருவால் 1960ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட பேராசிரியர், 26 ஆண்டு கடின உழைப்பின் பயனாக 1986-ஆம் ஆண்டு 90ஆவதும் இறுதியும் ஆன பகுதியை வெளிக்கொணர்ந்தார். மஹாத்மா காந்தியின் கட்டுரைகள், சொற்பொழிவுகள், கடிதங்கள், தலையங்கங்கள், உரையாடல்கள் - பல்லாயிரக்கணக்கான பக்கங்கள் கொண்டவை - அனைத்தையுமே நுண்ணறிவுடனும், பகுப்புணர்வுடன் ஆய்ந்து, இந்த 90 தொகுதிகளையும் வெளிக் கொணர்ந்தார் இவர். இது உண்மையிலேயே ஓர் மிகப்பெரும் சாதனை. ஆயினும் எந்த இடத்திலும் தனது பெயரைப் பொறித்துக் கொள்ளவில்லை. எத்தகைய ஓர் உயரிய தன்னடக்கம்! 1986-ஆம் ஆண்டு இறுதிப் பகுதி வெளியிடப்பட்டபோது பிரதமர் இந்திரா காந்தி மிகப் பொருத்தமாகக் குறிப்பிட்டார்: "இந்தத் தொகுப்பினை வெளிக்கொணர பெருமுயற்சி செய்த பேராசிரியர் சுவாமிநாதன், மஹாத்மா காந்தியையும் ரமண மஹரிஷியையும் தீவிரமாகப் பின்பற்றி நடப்பவர் என்பதற்குச் சான்றாக தீவிர சிரத்தையுடன் செயலாற்றி உள்ளார். இந்த மாபெரும் தொகுப்பை வெளிக் கொணர்ந்த பெருமை அனைத்தும் அவரையே சாரும்" என்று புகழ்மாலை சாற்றினார்.*

*பேராசிரியர் அவர்களின் சிறப்பு மிகுந்த வாழ்வினை மிகச் சுருக்கமாகக் கூறினும்கூட அது நவரத்தினம் பதித்த நகைபோல மிளிரும். 1896 முதல் 1994வரை வாழ்ந்த தொண்ணுற்று எட்டு ஆண்டு அவரது பூவுலக வாழ்க்கையே ஒரு இடையறாத வெற்றிப் பாதை. சென்னை ராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலத்தில்*

முதல் வகுப்பு ஹானர் பட்டம்; காங்கிரஸ் தலைவர் ஸ்ரீனிவாசன் ஐயங்கார் எனும் பெரும் தலைவர் கீழ் சட்டப் பயிற்சி; இங்கிலாந்து சென்று ஆங்கிலத்தில் மேற்படிப்பு, சிதம்பர் மீனாக்ஷி கல்லூரியில் துணை முதல்வர் பதவி; தமிழ் மொழி மறுமலர்ச்சிக்காக 1930-40 ஆண்டுகளின் பேருழைப்பு; தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தில் பொன்னால் பதிக்க வைக்கும் சேவை; 'கட்டை வண்டி' எனும் பிரசித்தி பெற்ற அங்கத நாடகம்; 1953 முதல் 1959 வரை இந்தியன் எக்ஸ்ப்ரஸ் பத்திரிகையின் இணை ஆசிரியர், 1960 முதல் 1991 வரை 'மஹாத்மா காந்தி எழுதியவற்றின் தொகுப்பாசிரியராக வரலாற்றில் பொறிக்கத்தக்க சாதனையும் சேவையும்; 1972-ஆம் ஆண்டில் பத்மபூஷன் விருது, 1987-ஆம் ஆண்டில் காந்திகிராம் பல்கலைக்கழகத்தால் கௌரவ டாக்டர் விருது போன்ற பல்வேறு துறைகள் இவரால் சிறப்புப் பெற்றன.

விருதுகள் பெற்றது மட்டுமல்ல. சக்தி வாய்ந்த நிறுவனங்களை நிர்மாணிப்பதில் பேராசிரியர் தலைசிறந்து விளங்கினார். 1970-இல் இவர் துவங்கிய டெல்லி ரமண கேந்த்ரா இன்று ஆல்போல் தழைத்து வளர்ந்துள்ளது. ரமண ஞான போதத் தொகுப்புகள் போன்ற பல்வேறு தலைசிறந்த, கருத்தாழமிக்க நூல்களை இது வெளியிட்டுள்ளது. அதன் சேய் கேந்திரங்கள் பல இடங்களிலும் தழைத்தோங்கி வளர்ந்துள்ளன. சென்னை காந்தி மிஷன் பேராசிரியரின் மற்றொரு கொடை தேசிய புத்தக டிரஸ்டின் தேசிய புவியியல் தொகுப்பு ஆசிரியராக அவரது சேவை விஞ்ஞான உலகிற்கு ஓர் அணிகலன். மஹாகவி சுப்ரமணியம் பாரதியின் நூற்றாண்டு நூல் வெளியீடுகளின் தலைவராக மஹாகவியின் மாண்பை உலகெங்கும் பரவச் செய்தார் பேராசிரியர் சுவாமிநாதன்.

மஹாத்மாவினைத் தனது வழிகாட்டியாக ஏற்ற பேராசிரியர், அவர்தம் தலைமைச் சீடரான வினோபா

பாவே தென்னகத்தில் பூதான் இயக்கத்தைத் துவக்கியபோது அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார். விநோபாவின் கீதைப் பேருரைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் தொடர்ச்சியாக வெளியிட்டார்.

சமுதாய முன்னேற்றத்திலும் பேராசிரியரின் சேவை இணையற்றது. மெட்ராஸ் சமூக சேவை இயக்கத்தைத் தலைமையேற்று நடத்தி ஹரிஜன மேம்பாட்டுக்கு வழிவகுத்த பேராசிரியரை அரசு 1957-இல் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தது. மேலும் 1958-59-ஆம் ஆண்டுகளில் இந்திய அரசாங்கக் குழுவிற்குத் தலைமைதாங்கி, ரஷ்யா, போலந்து, செக்கோஸ்லாவாகிய மற்றும் யூகோஸ்லாவியா நாடுகளுக்கு விஜயம் செய்தார்.

மஹாத்மாவிடம் பேராசிரியர் கொண்டிருந்த மதிப்பு இணையற்றது. காந்திஜியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு வாழ்நாள் முழுதும் கதராடையையே அணிந்திருந்தார். 1960-ஆம் ஆண்டில் மஹாத்மா காந்தி படைப்புகளின் தொகுப்பு பதிப்பிக்க முடிவு செய்தபோது, இந்தப் பிரம்மாண்டமான வேலைக்கு மிகத் தகுதியானவர் பேராசிரியரே என்று கருதியே உபராஷ்டிரபதி ராதாகிருஷ்ணனின் ஆலோசனை பேரில் பிரதமர் நேரு பேராசிரியரை இந்தத் தொகுப்பின் தலைமை ஆசிரியராக நியமித்தார். 26 ஆண்டுகளில் பேராசிரியரின் கடுமையான அறிவார்ந்த உழைப்பினால் இந்த மாபெரும் சாதனை வெற்றிபெற்றது. இந்த வேலையை 1960-இல் துவங்கியபோது ராஜாஜி கேட்டார்: “இப்போது நீங்கள் காந்திஜியின் படைப்புச் சேவையில் நுழைந்து உள்ளீர். ஆனால் ஏற்கெனவே நீங்கள் பகவான் ரமணரின் படைப்புகளிலும் திணிக்கப் பட்டுள்ளீர்கள். எப்படித் தொலைதூரத்தில் உள்ள தலைநகரில் அமர்ந்து இந்த இரண்டு மாபெரும்

அறைகூவல்களை சமாளிக்கப் போகிறீர்கள்?" என்று வினவினார். ஆயினும் இறையருளால் பேராசிரியர் இரண்டு அறைகூவல்களிலுமே பெருவெற்றி பெற்றார்.

பேராசிரியர் வித்தூன்றிய டெல்லி ரமண கேந்திரம் பேரியக்கமாக உருவெடுத்து பல சேவைகளைச் செய்துள்ளது. அவரது முயற்சியால் பகவான் தபால் தலை வெளியிடப்பட்டது. பகவானின் நூற்றாண்டு விழா கொண்டாட்டமும், கருத்தரங்கமும் ஒருவார அளவில் டில்லி மாநகரில் நடத்தப் பெற்றது. 1974-இல் டில்லி மாநகரின் முக்கிய வீதியான லோதி ரோட்டில் ரமண கேந்திரத்திற்குச் சொந்தமான கட்டிடம் உருவானது.

பகவானைப் பற்றி பேராசிரியரால் எழுதப்பட்டு 1976-ஆம் ஆண்டில் தேசிய புக் டிரஸ்டினால் வெளியிடப்பட்ட பகவானைப் பற்றிய நூல், 1976-ஆம் ஆண்டு நெருக்கடி (Emergency) சமயத்தில் மொரார்ஜி தேசாய் கண்காணா இடத்தில் சிறைப்பட்டு இருந்த சமயம் அவருக்குத் தரப்பட்டது. பகவானிடம் ஆழ்ந்த பக்தி கொண்ட மொரார்ஜி நூலினை ஆழ்ந்து படித்து, அதன் சில கருத்துக்களைக் குறித்து, சில வினாக்களையும் எழுப்பி தபால் கார்டு ஒன்று அனுப்பினார். அவரது சீரிய சிரத்தை கண்டு வியந்த பேராசிரியர் அவருக்கு எழுதிய பதில் கருத்தாழம் மிக்கது. பகவானின் ஒப்புயர்வற்ற சிறப்பை பேராசிரியர் இந்தக் கடிதத்தில் எழுதி இருந்தார்.

பேராசிரியரின் எழுத்துக்களும் படைப்புகளும் கருத்தாழமும் நடையழகும் மிக்கவை. 'மௌண்டன் பாத்' இதழில் அவர் எழுதிய கட்டுரைகள் கருத்தையும் இதயத்தையும் கவர்வன. அவரது 'குருவாசகக் கோவை' ஆங்கிலக் கவிதை மொழி ஆக்கம் ஞானத்தின் சுவைப் பிழிவு. அவர் எழுதிய ஒவ்வொரு வாக்யத்திலும் அவரது ஆழ்ந்த ஞானம் முத்திரையாக அமைந்தது.

கம்பராமாயணத்தில் கோதாவரி நதியை ராம-லட்சுமணர் காணும் காட்சியை விவரிக்கும் கம்பன் கூறுகிறான்:

**புவியினுக்கு அணிஆய், ஆன்ற பொருள்**
**தந்து, புலத்திற்று ஆகி**
**அவி அகத் துறைகள் தாங்கி,**
**ஐந்திணை நெறி அளாவி,**
**சவி உறத் தெளிந்து, தண்ணென்**
**ஒழுக்கமும் தழுவி, சான்றோர்**
**கவி எனக் கிடந்த கோதாவரி**

என்பது கம்பன் உவமை.

வீரர் இருவர் கண்ட இந்தப் பரந்த நதி, இந்த உலகத்துக்கே ஆபரணமாய் அமைந்து, ஆழ்ந்த பொருள் அமைதியைத் தந்து, இடத்திற்குத் தக்கபடி அமைந்து பல்வேறு துறைகளிலும் சிறப்புப் பெற்று, ஐந்து திணைகட்கும் உரிய கர்ம நெறியை விளம்பி, குடியம் இன்றித் தெளிந்து, ஒழுக்கம் மிகுந்த அறிஞரின் கவிதை போன்று சிறப்பாக ஓடுகிறது என்கிறான் கம்பன்.

பேராசிரியரின் எழுத்துக்கள் கம்பனின் இந்த வரிகட்கு எடுத்துக்காட்டாக அமைபவை.

மாபெரும் ஆங்கில அறிஞரான பேராசிரியர் பற்றி அவரது அஞ்சலி நாளில், அவர் செங்கோலோச்சிய ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியர் மார்க் அந்தோணி பற்றிக் கூறியதைக் கூறி, இது பேராசிரியருக்கும் சாலப் பொருந்தும் என வணங்குகிறோம்.

*"His life was gentle, and the elements*

*So mixed in him that nature might stand up*

*And say to all the world 'This was a man'"*

*The Professor was a true jnani, the man with capital "M", as Swami Vivekananda declares.*

# ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை

## *ராஜபாளையமும் ரமணாலயமும்*

*தென் தமிழகத்தின் ஒரு சிறிய நகரம் 'ராஜபாளையம்'. சான்றோர் பெருமக்கள் இவ்வூரை ஒரு புண்ணிய வேதாந்த பூமியென்றே அழைப்பர். பெண்கள் தங்களுடைய குழந்தைகளை பள்ளிக்கும், கணவன்மார்களை வேலைக்கும் அனுப்பிய பின்னர் வேதாந்த வகுப்புகளுக்குச் செல்லும் அளவிற்கு வேதாந்தமானது இவர்களின் ரத்தத்திலேயே ஊறியிருக்கிறது. கைவல்ய நவநீதம் கரைத்துக் குடித்த மகளிர் அமைப்பு, கைவல்ய நவநீதப் பாராயணக் குழுவினர் என்று ராஜபாளையத்தைச் சுற்றியுள்ள ஊர்களிலும் வேதாந்தம் அரசமரவேர் போல் பரவியிருக்கிறது என்று வேதாந்திகள் மார்தட்டிக் கொள்வதற்கு இதுவும் ஒரு தக்க சான்று.*

*இதே ஊரிலிருந்து பகவத் கீதை, கைவல்யம், வேதாந்த சூடாமணி, ஞான வாசிட்டம் போன்ற நூல்களில் சிறப்பாக விளங்கி வந்த ஒரு பெண் தமிழில் வெளிவந்த பகவான் ஸ்ரீ ரமணரின் முதல் வாழ்க்கை வரலாற்று நூலான ஸ்ரீ ரமண விஜயத்தின் அட்டைப் படத்திலுள்ள பகவானின் புகைப்படத்தில் அவரின் கருணை ததும்பும் பார்வையால் மிகவும் ஈர்க்கப்பட்டு, அவரை எப்படியாவது திருவண்ணாமலை சென்று தரிசிக்க வேண்டுமென்ற தீவிர வைராக்கியத்துடன் வாழ்ந்து வந்துள்ளார். அவரே பின்னாட்களில் ரமண அன்பர்களால் 'ராஜபாளையம் ரமணியம்மாள்' என்று அழைக்கப்பட்டார். பெண்கள் வெளி இடங்களுக்குச் செல்வது முற்றிலுமாக தடை*

*செய்யப்பட்ட அக்காலகட்டத்திலேயே தனியொரு ஆளாக பகவானைப் போலவே வீட்டிற்குத் தகவல் ஏதும் தெரிவிக்காமல் திருவருணையை அடைந்துள்ளார். ஆனால் இரண்டு வருட கடுமையான போராட்டத்திற்குப் பிறகே இந்தப் பொன்னான வாய்ப்பு அவருக்குக் கிட்டியிருக்கிறது.*

*ரமணியம்மாள் தன் ஊரை விட்டு வெளியே வந்த செயலானது அவரை மட்டுமில்லாது அவருடைய குடும்பத்தையும் வெகுவாக பாதித்துள்ளது. ஒரு கட்டுக்கோப்பான குடும்பத்தில் பிறந்த பெண் செய்யும் செயலா இது என்று ஊரில் பலர் இவருடைய குடும்பத்தை வசைபாடியுள்ளனர். முதலில் இவருடைய இந்தப் புனித யாத்திரையின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாத இவருடைய குடும்பத்தினரும், உறவினர்களும் பின்னர் இவரின் உன்னத பக்தியைப் புரிந்துகொண்டு ஒவ்வொருவராக அருணையை நோக்கிப் படையெடுக்கத் துவங்கியுள்ளனர். இப்படி இவர்கள் ரமணியம்மாளை பார்க்கப் போகும் சாக்கில் பகவானைத் தரிசிக்கச் சென்றுள்ளனர். ஆனால் ரமணியம்மாளின் குடும்ப நண்பரின் இல்லத்திலிருந்த ஒருவர் இந்த வேதாந்தம், சாஸ்திர, சம்பிரதாயங்கள், திருவண்ணாமலை, ரமணாஸ்ரமம் என்பதில் துளிக் கூட விருப்பமில்லாமல் கல்வி, வெளிநாட்டில் வேலை என்றே வாழ்ந்து வந்துள்ளார். அந்த நபரை பகவான் எவ்வாறு தன்பால் ஈர்த்து, தன்னுடைய 125-ஆம் ஆண்டு ஜயந்தி விழாவினை தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்கள் வியக்கும் அளவிற்கு கோலாகலமாக நடப்பதற்குக் கருவியாகப் பயன்படுத்தினார் என்பதைத் தான் நாம் இந்த முறை காணப்போகிறோம்.*

*மேற்கு ஆப்பிரிக்க நாடான டோகோவில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையில் எலக்டிரிக்கல் துறையில் உயரிய பதவியில் பணியாற்றி வந்துள்ளார்*

திரு.லோகநாத ராஜா அவர்கள். நேர்மை தவறாது பணியாற்றியது மட்டுமில்லாமல் அந்நாட்டு மக்கள் பலரையும் அந்தத் தொழிற்சாலையிலேயே பலதரப்பட்ட பணிகளிலும் அமர்த்தியுள்ளார். இதனால் இவருக்கு மதிப்பும் மரியாதையும் அந்நாட்டு மக்களிடம் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருந்துள்ளது. இதன்பயனாய் விளைந்த பொறாமையின் பின்விளைவான *Cornering* கர்மாவில் இவரும் தப்பவில்லை. உடன் பணியாற்றிய நண்பர் ஒருவரின் நம்பிக்கை துரோகசெயலால் தன்னுடைய வேலையை ராஜினாமா செய்ய முடிவெடுத்துள்ளார். இந்தத் தகவல் அந்த நாட்டு மக்களுக்கு எப்படியோ கசிந்துள்ளது. *#Please Don't Go Indian* என்று எழுதி ஆர்ப்பாட்டமே நடத்தியுள்ளனர். ஆப்பிரிக்கா ஒரு இருண்ட கண்டம். அதில் பெரும்பான்மையான மக்கள் கருப்பு நிறத்தவர் என்றிருந்தாலும் அவர்கள் உள்ளத்தால் தூய வெண்மை நிறமுடையவர்கள் என்பதற்கு இந்தச் சம்பவமானது ஒரு தக்க சான்று. வேலையை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவிற்குக் கிளம்பும் சமயம் விமான நிலைய வளாகத்திற்கு வந்த இவருடைய நண்பர் இவரிடம் அருகில் வந்து தன்னுடைய தரம் தாழ்ந்த செயலை எண்ணி வருந்தி திரு.லோகநாத ராஜா அவர்களைப் பார்த்து வருங்காலத்தில் நான் உங்களைவிட அதிக அளவில் பணம், பதவிகளை சம்பாதிக்கலாம். ஆனால் இந்த மக்களின் உள்ளத்தில் நீங்கள் பெற்றிருக்கும் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்று கண்ணீர் மல்கக் கூறி விடைபெற்றுள்ளார்.

இந்தியா வந்தபிறகு இவருக்கு இதே துறையில் பெரிய தொழிற்சாலைகளில் பல உயரிய பதவிகள் கிடைத்துள்ளது. இருந்தாலும் தன் நண்பர் தனக்குச் செய்த துரோகமும் தன்னுடைய கடின உழைப்பிற்குக் கிடைக்காத போதிய அங்கீகாரமும் இவரை வாட்டி வதைத்துள்ளது. இது இவரை அதீத மன அழுத்தத்திற்கு

தள்ளியுள்ளது. அனைவரிடமும் சகஜமாக பழகக் கூடிய குணம்படைத்தவராக இருந்தாலும் கூட கொஞ்சம் கொஞ்சமாக அனைவரிடமும் விலகி தனிமையில் இருந்துள்ளார். இது இவரை மட்டுமில்லாது இவருடைய குடும்பத்தினரையும் மென்மேலும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. இடமாறுதலாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று சிலர் கூறியதைக் கேட்டு தேனி, சென்னை போன்ற இடங்களுக்கு மாற்றுதலாகி சென்றுள்ளனர். ஆனால் இந்த இடமாற்றம் இவருக்கு எந்தவித மாற்றமும் ஏற்படுத்தவில்லை.

சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்துடன் தொடர்பில் இருந்த குடும்பத்திலிருந்து வந்திருந்த காரணத்தினால் குடும்பத்துடன் பலமுறை ரமணியம்மாளை சந்திக்கச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்திருக்கிறது. இதனால் பகவானின் பக்தர்களான போஸ்ட் மாஸ்டர் ராஜா அய்யர் மற்றும் வடிவுடையார் அவர்களின் தொடர்பும் இவருடைய குடும்பத்தினர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் இவருக்கு மட்டும் ஏனோ இந்த ஆஸ்ரம தொடர்புகளில் ஈடுபாடு இல்லாமல் ஒதுங்கியே இருந்துள்ளார். ஆனால் இந்த பிரச்சனைகளுக்கு பின்னர் (1997) ரமணாஸ்ரமத்திற்கு சென்றபொழுது இவரை ஆஸ்ரமத்திலேயே விட்டுவிட்டு இவருடைய மனைவி உட்பட அனைத்து உறவினர்களும் ராஜபாளையம் திரும்பியுள்ளனர். இந்த ஒருவார காலம் தான் இவரின் வாழ்க்கையையே புரட்டி போட்டுள்ளது.

ஆஸ்ரமத்தில் தங்கியிருந்தபோது, நூலகத்திற்குச் சென்றாலும் அன்றைய நாளிதழ்களை மட்டுமே புரட்டிவிட்டு திரும்பிவிடுவாராம். பகவானைப் பற்றிய புத்தகங்களைப் படிக்கும் எண்ணம் எதுவும் அப்போது எழவில்லை. ஒருநாள் ஆஸ்ரமத் தலைவருடன் பேசிக்

*கொண்டிருக்கும் பொழுதே அவர் இவருடைய கையில் 'நான் யார்' புத்தகத்தைக் கொடுத்து படிக்கக் கூறியிருக்கிறார். அவரும் அதைத் தன்னுடைய அறைக்கு எடுத்துச் சென்று படிக்கத் தொடங்கியிருக்கிறார்.*

*ஒவ்வொரு கேள்விகளையும் வாசித்துக்கொண்டே வந்திருக்கிறார். 25 ஆவது கேள்வி வரை அந்தப் புத்தகமானது இவருக்கு எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் 26 ஆம் கேள்வியையும் அதற்கான பதிலையும் படிக்கும் சமயம் இந்தக் கேள்வி தனக்காகவே சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் பகவானிடம் கேட்டிருப்பதாகவும் அதற்கு பகவான் அளித்த பதிலானது தனது நீண்ட நாள் சந்தேகத்திற்கு விடையளிக்கும் விதமாகவே அமைந்துள்ளது என்று நெக்குருகிப் போயிருக்கிறார். அன்று தொடங்கியிருக்கிறது இந்த பக்தரின் ரமணாலய பணி. 2000 ஆம் ஆண்டில் தன் இல்லத்தைக் கட்டும்பொழுதே வரவேற்பு அறையைப் பெரியதாக கட்டத் தீர்மானித்துள்ளார். அதனால் இதன் மாடிப்பகுதியில் கீழ்ப்புறத்தின் மற்ற பகுதிகளையும் சேர்த்து ஒரு பெரிய அறை பொதுமக்கள் (500 நபர்கள் அமரும் அளவிற்கு) பகவானை வழிபடுவதற்காகவே அதுவாகவே அமைத்துகொண்டது என்று கூறினால் மிகையாகாது. அதற்கு 'ரமணாலயம்' என்றே பெயர் சூட்டியுள்ளனர்.*

*பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் 125-ஆம் ஆண்டு (2004) ஜயந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீ ராமகிருஷ்ண மடங்களில் ராமகிருஷ்ணர், சாரதா தேவியார், விவேகானந்தர் ஆகியோரின் ஆராதனை விழாக்களுக்கு ரத யாத்திரை நடைபெறுவது போல நம் பகவானுக்கும் ஒரு ரத யாத்திரை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டு, இந்த ரதயாத்திரையின் பொறுப்பாளராக செயல்பட திரு.லோகநாத ராஜாவை ரமணாஸ்ரம*

*நிர்வாகம் தேர்ந்தெடுத்தது. இந்த ரதமானது தமிழகம் மட்டுமின்றி கேரளம், ஆந்திரம், மற்றும் கர்நாடகம் மாநிலங்களில் உள்ள 108 ஊர்களில் 48 நாட்கள் பயண செய்ய திட்டமிடப்பட்டது.*

*பகவான் ரமணருக்கு ரதயாத்திரை நடத்துவது இதுவே முதல்முறை. ரதத்திற்காக தங்களுடைய ஒரு புதிய வண்டியை தந்து உதவியவர் ஜெயஜோதி டெக்ஸ்டைஸ் லிமிடெட் திரு.டி.ஆர்.கண்ணன் அவர்கள் அதோடு மட்டுமில்லாமல் மேலும் ரதத்திற்குப் பின்னால் வர இரண்டு வண்டிகளையும் தந்து உதவியுள்ளார்கள் என்று திரு.லோகநாத ராஜா அவர்கள் நினைவு கூர்ந்தார். பகவானின் புகைப்படத்தை மட்டும் ரதத்தில் வைத்து பயணிப்பதாக என்றிருந்ததாம், ஆனால் அன்பர்களால் திருச்சுழி ஸ்ரீ மௌன சுவாமிகள் என்று அழைக்கப்படும் சுவாமி சத்யானந்தா அவர்கள் புகைப்படத் திட்டத்தைக் கைவிடச்சொல்லி பகவானின் சிலையை வைத்தே இந்த யாத்திரை நடைபெற வேண்டுமென்று அன்புக் கட்டளையிட்டு ரதத்தில் பகவானைக் காண மிக ஆவலாக இருந்தாராம். உடனே சிலை செய்யும் புனித பணியானது சுவாமிமலையில் உள்ள ஒரு ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சிலை செய்வதற்கான முழு செலவையும் திரு.S.S.ஸ்ரீநிவாசராஜா அவர்களே ஏற்றுக் கொண்டாராம். பின்னர் ரத யாத்திரையானது திருச்சுழியில் தொடங்கி திருவண்ணாமலையில் நிறைவடைந்துள்ளது. இதை ஒரு வரியில் எளிதாகக் கூறிவிட்டோம். ஆனால் யாத்திரை நடைபெறுவதற்கு சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னரே அதற்கான பணிகளைத் துவங்கியுள்ளனர். விளம்பரத்திற்கான அனைத்துச் செலவுகளையும் டி.வி.எஸ். நிறுவனமும் ராம்கோ நிறுவனமும் பொறுப்பேற்றுக் கொண்டதாம். மேலும் திரு.லோகநாத ராஜா அவர்களுக்கு உறுதுணையாகச் செயல்பட திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தைச் சேர்ந்த இனிய நண்பர்*

*திரு.T.V.சந்திரமௌலியை ரமணாஸ்ரமத்திலிருந்து நியமித்தனர். இப்பொழுது இருப்பதுபோல் 2002-2003 ஆண்டுகளில் மொபைல் பயன்பாடு பெரிய அளவில் இல்லை. ஆதலால் ஒவ்வொரு ஊருக்கும் 2 முதல் 3 முறை அலைய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் பல ஊர்களில் பகவானைப் பற்றி முதல் முறையாகத்தான் கேள்விப்பட்டிருக்கிறார்கள். சுமார் 10 லட்சம் அருணாசல அக்ஷரமணமாலை புத்தகங்கள் & பகவானின் புகைப்படங்கள் அச்சடிப்பதிலிருந்து அதை ஊர்வாரியாக விநியோகம் செய்வது, ஓதுவார்கள் கொண்டு ரமண சந்நிதிமுறை பாராயண செய்ய ஏற்பாடு செய்வது என்று இரண்டாண்டுகள் இவர்களுடைய கடுமையான உழைப்பிற்குக் கிடைத்த ஊதியம் என்னவென்றால் இன்று பல ஊர்களில் நாள் தவறாமல் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெறுவது மற்றும் வருடாவருடம் மாணவர்களுக்கான அக்ஷரமணமாலை ஒப்புவித்தல் போட்டிகள் நடைபெறுவது மற்றும் அந்தந்த ஊர்களில் பக்தர்கெளுக்கென ஒரு சிறிய அளவிலான வழிபாடு மையங்கள் அமைந்திருப்பதேயாகும். ஏனென்றால் இந்த ரதயாத்திரை மூலம்தான் பல அன்பர்களுக்கு பகவானைப் பற்றியும் அவர் இயற்றிய அருணாசல அக்ஷரமணமாலையைப் பற்றியும் தெரியவந்துள்ளது.*

*திரு.லோகநாத ராஜா அவர்களின் துணைவியார் திருமதி.சத்யபாமா அவர்கள் (இவருடைய தந்தையார் ராஜபாளையம் ரமணியம்மாள் அவர்கள் ஆரம்ப காலங்களில் திருவண்ணாமலை சென்ற நேரத்தில் பல உதவிகள் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது) முதலில் பகவானுக்காக இவர் செய்யும் செலவினைக் கண்டு வருத்தமடைந்துள்ளார். ஆனால் ரதயாத்திரையானது பகவான் பக்தரான திரு.துவாரகநாத் ரெட்டி அவர்களின் பிறந்த ஊரான சித்தூரில் நடைபெற்ற சமயம் சுமார் 4 கி.மீ தொலைவிற்கு மாடியிலிருந்து*

*ரதத்திற்கு மலர்களைத் தூவி வரவேற்றுள்ளனர். பாதி ரதம் மலர்களால் மூழ்கிவிட்ட சம்பவத்தை நேரிலே கண்ட இவருக்கு ரமணாலயத்திற்கு இவர்கள் செய்யும் கைங்கர்யத்தைப் பற்றி எந்த ஒரு கேள்வியும் கேட்பது கிடையாது. மற்றும் பகவான் மேல் கொண்ட பக்தியானது மென்மேலும் அதிகரிக்கத் துவங்கியுள்ளது. பகவான் ஸ்தூல தேகத்துடன் இருந்த சமயம் இதுபோன்ற ஜயந்தி விழாக் கொண்டாட்டங்களில் சிறிதளவு கூட ஈடுபாடில்லாமல் இருந்தார் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவது பகவானே அடிக்கடி கூறும் Divine Automatic Action என்றே நாம் புரிந்துகொள்ள முடிகிறது.*

*ரதயாத்திரை முடிவுற்றவுடன் பகவான் ரமணரது சிலையை பல பிரச்சனைகளுக்கு இடையில் ரமணாலயத்தில் கொண்டு வந்தார். சிலையை வைத்த மறுநாளே திரு.ராஜா அவர்களுக்குப் பல பிரச்சனைகள் துவங்கியிருக்கிறது. அங்கு உள்ள பலர் இந்த சிலை வந்த நேரம் தான் இவ்வளவு பிரச்சனைகளுக்கும் காரணம் என்று கூறியுள்ளனர். ஆனால் அதற்கு இவர் இந்த ரதயாத்திரையானது தங்களால்தான் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது என்று எண்ணி அகந்தையுடன் இருக்கக் கூடாது என்று பகவான் தங்களுக்கு கொடுத்த மிகப் பெரிய பரிசுதான் இதுபோன்ற சம்பவங்கள் என்று கூறி, நடப்பது என் தடை செய்யினும் நில்லாது ஆகலின் மௌனமாய் இருத்தல் நன்று என்று இருந்துள்ளார். பின்னர் ஒவ்வொரு பிரச்சனைகளும் பரிதி முன் தோன்றிய பனி விலகியுள்ளது.*

*ராஜபாளையம் ரமணாலயத்திலிருந்து இதுவரை சுமார் 75 புத்தகங்கள் பதிப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ரமணாலயத்திலிருந்து திரு. நொச்சூர் வெங்கடராமன் அவர்களை அழைத்து இதே*

ராஜபாளையத்தில் நான்கு முறை தொடந்து 6 நாட்கள் உள்ளது நாற்பது சொற்பொழிவு நடத்தியுள்ளார்கள். பெங்களூரு RMCL அவர்களின் ரமண நாட்டிய நாடகம் (அனன்ய ரமணா வரை) 7 முறையும் மேடையேற்றியுள்ளனர்.

2014-ஆம் ஆண்டு பகவான் இயற்றிய அருணாசல அக்ஷரமணமாலையின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தொடர்ந்து ராஜபாளையம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் உள்ள பள்ளிகளுக்கு இளையோர் வாழ்வில் ஞான தீபம் என்ற பெயரில் அக்ஷரமணமாலை பாராயணத்தின் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். இதன் துவக்க விழாவிற்கு திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்தைச் சேர்ந்த திரு.T.V.சந்திரமௌலி மற்றும் திரு.ராஜசேகர் அவர்களும் வந்திருந்து நிகழ்ச்சியை சிறப்பித்துள்ளனர். இதற்காக அருணாசல அக்ஷரமணமாலை பாராயண புத்தகம் மற்றும் குறுந்தகடு (C.D.) அத்துடன் அக்ஷரமணமாலைக்கு டி.ஆர்.கனகம்மாள் அவர்களின் விளக்கவுரை புத்தகம் அடங்கிய ஒரு பை அனைத்து குழந்தைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தரப்படுகிறது. தற்போது பகவானின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்கள் தெரிந்து கொள்வதற்காக ஆர்தர் ஆஸ்போர்ன் அவர்களின் 'ஸ்ரீ ரமணரும் ஆன்மிகப் பாதையும்' என்ற புத்தகமும் வழங்கப்பட்டு வருகிறது.

பகவான் பக்தரும் திரைப்பட இசையமைப்பாளரு மான திரு.இளையராஜா அவர்களை ரமணாஸ்ரமத்தில் சந்தித்து பள்ளி மாணவர்களுக்கு இந்த அக்ஷரமணமாலை பாராயணம் அடங்கிய குறுந்தகட்டை பகவானின் பிரசாதமாக தருவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக சொன்ன மறுநிமிடமே அவர் சென்னைக்கு சென்று அவர் குரலிலேயே அக்ஷரமணமாலையை பதிவு செய்து அன்றைக்கே ரமணாஸ்ரமத்தை அடைந்து




*C.D. யை இவருடைய கைகளில் ஒப்படைத்துள்ளார். ரமணாலயத்தில் கடந்த 18 ஆண்டுகளாக திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தை போல மாலை பாராயணம் நடைபெற்று வருகிறது (C.D. பயன்படுத்துவது இல்லை) என்பது குறிப்பிடத்தக்கது.*

*சமீபத்தில் மதுரை வந்திருந்த திரு.சந்திரமௌலி அவர்கள் ராஜபாளையம் ரமணாலயம் சென்று வரலாம் என்று கூறியதை அடுத்து அங்கு சென்றிருந்தோம். அப்பொழுது அங்கிருந்த பகவான் சிலையை பார்த்துக் கொண்டேயிருந்த திரு.லோகநாத ராஜா அவர்கள் திரு.சந்திரமௌலியிடம் இப்பொழுதுதான் ரதயாத்திரை நடந்து முடிந்தது போல் உள்ளது. ஆனால் 14 ஆண்டுகள் ஓடிப்போய்விட்டது பார்த்தீர்களா என்று பழைய சம்பவங்களை நினைவு கூர்ந்தார்.*

*எத்தனை இன்னல்கள் இடைஞ்சல்கள் வந்தாலும் என் கடன் ரமண பணி செய்து கிடப்பதே என்று வாழ்ந்து வரும் இவர்களுக்கு ரமண பக்த விஜயத்தில் கண்டிப்பாக ஒரு இடமுண்டு.*


# ரமணாயனம்

**க்ரேஸி மோஹன்**

*மாசிகரம் மாதுமையாள் பூசிக்கும் ஆசுரரை*
*வாசகர்தம் பாசுரத்தால் விட்டன்று ஈசன்*
*பெருந்துறை வந்தாற்போல் பேதையிவன் பாக்காய்*
*இருந்தயிறை யேரமணா இன்று....(237)*

*[கீழ்வரும் பாடல்கள் முருகனார் பகவானை அடைந்து ரமண சந்நிதி முறை பாடிய சிறப்பினைக் கூறுவன.*

*உமைதேவியால் பூஜிக்கப்பட்டு கைலாயத்தில் வீற்றிருந்த சிவபிரான், மாணிக்கவாசகர் பாடும் திருவாசகத்தைக் கேட்க வேண்டி,*



*கைலாயத்தை விட்டு நீங்கி, திருப்பெருந்துறை வந்தது போன்று முருகனார் பாடலைக் கேட்க வேண்டி இங்கு வந்துள்ளார் அன்றோ!]*

*திருவெம்பா வையைப்போல் தீந்தமிழில் ஞான*
*குருவெம்பா வையை முருகாநீ தரவுன்பால்*
*மாணிக்க வாசகரின் மேதமை உள்ளதென்றார்*
*சீனிக்(கு) எறும்பால் சிறப்பு....(238)*

*[மணிவாசகர் இனிய தமிழில் திருவெம்பாவை யாத்து சிவனை வழுத்தியதுபோல, முருகனார், ஞானகுருவாம் ரமணர் மீது ரமண திருவெம்பாவை தந்தபோது, "முருகனாரே! உம்மிடம் மாணிக்கவாசகரின் பேரறிவு உள்ளது" என்று பகவான் கூறினார். சர்க்கரை போன்ற பகவானின் மேன்மைக்கு எறும்பு போன்ற முருகனாரின் பாடல்களால் சிறப்பு வந்துற்றதல்லவா!]*

*சாதுவாய் வந்த சிவனை அறியாது*
*வேதியர் அன்றானை வன்புலியை மோதவிட*
*தோலுரித்த ஈசன் திருவாய் உபதேசம்*
*மாலறுக்கும் உந்தியார் நூல்....(239)*

*[தாருகாவனத்தில் வாழ்ந்து வந்த ரிஷிகள் பூர்வ மீமாம்ஸம் சார்ந்த கிரியைகளை இறுதி முக்தி தரும் என்று தவறாக எண்ணி, இறைவனை எண்ணாது யக்ஞங்கள் செய்து கொண்டிருந்தனர். அப்போது அவர்களை நல்வழிப்படுத்த பரதேசி கோலத்தில் வந்த ஈசனின் மேன்மை அறியாது அவர்கள் அவன்மீது யானை, புலி போன்றவை விட்டு அவனைத் தாக்க முயன்றபோது அவற்றின் தோலை உரித்து ஆடையாய் போர்த்திக் கொண்டார் கங்காளமூர்த்தி என்னும் அச்சிவன். இறுதியில் இறைவனே அவன் என்று அறிந்த தாருக வன ரிஷிகட்கு ஞான உபதேசமாக 'உபதேச உந்தியார்' என்னும் நூலை முருகனார் ஆரம்பிக்க பகவான் உபதேசம் முற்றிலுமே எழுதி முடித்தார்.]*

*பகவான் திருவாய் புலர்ந்த அமுதை*
*அகவாய் மலர்ந்து அருந்தி முகவை*

*முருகனார் செய்யுள் முகமாய்க் கொடுத்தார்*
*குருவா சகக்கோவை காண்....(240)*

*[பகவான் திருவாய் மலர்ந்து அளித்த ஞான அமுதினை, தன் இதயத்தைத் திறந்து உட்கொண்ட முருகனார், அந்த உபதேசம் முழுதையும் 'குருவாசகக் கோவை' என்னும் அரிய நூலாக ஆக்கிக் கொடுத்தார்.]*

*''அய்யே அதிசுலபம் ஆன்மவித்தை'' பல்லவியை*
*மெய்யன் முருகனார் முன்மொழிய அய்யன்*
*சரணமைந்து சொன்னார் சரளமாய் அன்று*
*வருணன் ரமணகவி வாக்கு....(242)*

*[(ஐயே! மெத்தக் கடினம்! என்ற நந்தனார் வார்த்தையைக் கேட்ட) முருகனார் அதற்கு மாற்றாக 'ஐயே! அதிசுலபம்!' என்ற பல்லவியை முருகனார் எடுத்துக் கொடுக்க தொடர்ந்து சரளமாய் சரணங்களை அமைத்து, வருணன் மழை இடையறாமல் மழை பொழிவதுபோல், பகவானின் நூலில் 'ஆன்ம வித்தை' கீர்த்தனம் எழுந்தது.]*

*அன்பர்கள் கேள்விக்கு அய்யன் பதில்களை*
*மண்பெற கோர்த்த முருகனார் தன்பதிவில்*
*எள்ளதில் எண்ணையாய் ஏற்றிக் கொடுத்ததே*
*''உள்ளது நாற்பதின்'' உரு....(243)*

*[பல்வேறு சந்தர்ப்பங்களில் பக்தர்கள் கேட்ட கேள்விகட்கு பகவான் அளித்த விடைகளைச் சேகரித்து, பகவானையே வெண்பாவில் எழுதிய விளக்கப் பாடல்களை, எள்ளில் தங்கும் எண்ணெய் சுவைப் பிழிவாய் தந்ததே 'உள்ளது நாற்பது'.]*

*உள்ளதை உள்ளபடி உள்ளது நாற்பதை*
*உள்ளம் அறிதற்க்(கு) உவமானம் சுள்ளிக்*
*கழியால் கடலைக் கடத்தல், ரமண*
*வழிநாற் பதுஅவ் வகை....(244)*

*[நமது மெய்யான ஆன்ம ஸ்வரூபத்தை உள்ளபடி தெளிவாக அறிவதற்கு பகவான் காட்டிய நேர்வழியை*

'உள்ளது நாற்பது' நூலில் பகவான் கூறுகிறார். பரமஞானம் பெறுவதற்கு இந்த நாற்பது பாடல்களை மட்டும் பயின்றால் மட்டுமே போதும். சிறிய கழியைக் கொண்டே பெருங்கடலைக் கடத்தல்போன்று, 'உள்ளது நாற்பது' பாடல்களை மட்டுமே, பிறவிக் கடலைக் கடக்கப் போதுமானவை]

*[245 முதல் 284 வரை ரமண வழி நாற்பது வெண்பாக்கள்.]*

## பிரண்டன் காண்டம்

*கண்ணன் கதைக்கு கிடைத்த சுகமுனிபோல்*
*அண்ணல் பகவான் அவதார எண்ணத்தை*
*நால்வருணம் தாண்டிய பால்பிரண்டன் தீட்டினார்*
*நூல்வடிவில் நானார் நிகழ்வு....(285)*

[பாகவத நூலை சுகப்பிரம்ம ரிஷி எழுத வந்ததுபோல, பகவானின் அவதாரம் மற்றும் உபதேசச் சிறப்பை முதலில் ஆங்கில நூல் வடிவில் எடுத்துரைத்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த பால் பிரண்டன். சம்பிரதாயம் கூறும் நான்கு வருணங்களுக்கும் அப்பால் பிறந்த அவர் 'நான் யார்' என்ற உபதேசத்தை பகவான் தமக்கு அளித்ததை A Search in Secret India என்ற நூல் வடிவில் தீட்டினார்.]

*அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாய்*
*பிரண்டனும் போலிகளைப் பார்த்து மிரண்டாலும்*
*சங்கல்பம் காஞ்சிமுனி சங்கராச் சாரியிடம்*
*செங்கற்பட் சந்திப்பில் சேர்ப்பு....(286)*

['அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'. தனக்குச் சரியான உபதேசம் வழங்கக் கூடிய சத்குருவை நாடி உலகம் முழுவதும் திரிந்த பால்பிரண்டன் பல போலி குருமார்களைக் கண்டு ஏமாந்தார். தெய்வாதீனமாய் காஞ்சி சங்கராசார்யாரிடம் வழிகாட்ட வேண்டி, செங்கல்பட்டில் சந்தித்தார்.]

*சூல்கொண்ட வான்மேகம் போல்வந்தார் ஆன்மீக*
*மால்கொண்டு இந்தமகா பூமிக்கு பால்பிரண்டன்*
*காஞ்சி பெரியவாளைக் காண உரியவாள்*
*வாஞ்சை ரமணரவர் வாக்கு....(287)*

*[மழைநீரைத் தன்னுள்ளே தாங்கிய மேகம்போல ஆன்மிகக் கேள்விகளைத் தம்முள்ளே அடக்கிக்கொண்டு தெய்வீகத் தாகத்துடன் இந்தப் புண்ய பூமிக்கு காஞ்சி மாமுனிவரைக் காண வந்தபோது, 'உனக்கு ஞானவழி காட்ட உரியவர் பகவான் ரமணர் ஒருவரே' என்று காஞ்சி மாமுனிவர் கூறினார்.]*

*ஆச்சரியம் பால்பிரண்டன் அன்றிரவு சொப்பனத்தில்*
*ஆச்சார்யாள் ஆசி அளித்திட பேச்சற்று*
*சுப்ரமண்ய சாதுவுடன் சோணா சலத்திலசல்*
*சுப்ரமண்யம் கண்டார் சிலிர்த்து....(288)*

*[என்னே வியப்பு! ("இது நடக்குமா?" என்று ஐயத்தில்) அன்றிரவு தூங்கிய பால்பிரண்டன் கனவில் சங்கராசார்யார் "அருணாசலம் சென்று பகவானைச் சந்திப்பாயாக! உன் தேடல் முற்றுப் பெறும்" என்று ஆசி கூறினார். சுப்ரமண்யம் என்னும் அன்பருடன் அருணாசலம் சென்று அங்கே ப்ரம்ம ஸவரூபமான பகவானைக் கண்டார்.]*

*நெடிதுயர் தோற்றம் நீண்ட கரங்கள்*
*விடியல் கதிராய் விழிகள் முடிவின்*
*முடிவாய் முதலின் முதலாய்த் தெரிந்தார்*
*படிகாரம் போல்பிரண்டன் பால்....(289)*

*[பகவானின் நெடிய தோற்றம் நீண்ட கரங்கள் அதிகாலைச் சூரியனைப்போல் மென்மையுடல் சுடர்விடும் விழிகள் - இவற்றைக் கொண்ட பகவான் முதலுக்கு முதலாகவும் முடிவுக்கு முடிவாகவும் ஸ்படிகம் போன்ற தூய உருவுடன் பால்பிரண்டன் முன் தோன்றினார்.]*

*வந்தார், அமர்ந்தார், வணக்கம் தெரிவித்தார்*
*நொந்தார் நிகழ்வின்றி பால்ப்ரண்டார் இந்தாளேன்*
*பந்தா புரிகின்றார்? பாரா(து) இருக்கின்றார்?*
*சிந்தா குலமானார் சோர்ந்து....(290)*

*[தியான அறையில் வந்து பகவான் அமர, பால் பிரண்டன் வணக்கம் தெரிவித்தார். பகவானோ அவர் பக்கமே திரும்பாமல் எங்கோ பார்த்தபடி இருந்தார். 'இப்படி அலட்சியம் காட்டுகிறாரே' என்று மனம் நொந்தார் பிரண்டன்.]*

*வெள்ளையர் உள்ளத்துள் மெள்ளப் புகுந்துவீண்*
*கள்ளக் குழப்பம் களைந்தாங்கே பிள்ளை*
*சிரிப்பொன்(று) உதிர்க்க, சிலிர்த்துப் புதிய*
*பிறப்பென்(று) உணர்ந்தாராம் பால்....(291)*

*[பிரண்டன்பால் திருக்கண்ணோக்கம் காட்டிய பகவானின் அருட்சக்தி மெள்ள பால் பிரண்டன் உள்ளத்தே புகுந்து, அங்கிருந்த குற்றங்களைக் களைந்து, தூய்மையாக்கி தன்பால் ஈர்த்தது. பால் பிரண்டனைக் கண்டு பகவான் ஒளிரும் புன்னகை பூக்க, தான் புதிய ஆன்மிகப் பிறவி எடுத்து விட்டதை அக்கணமே பால் பிரண்டன் உணர்ந்தார்.]*

*விடைவரை மத்தில் வினாக்கயிறு கொண்டு*
*கடைய நினைத்தவர் கண்டார் அடயிது*
*கையிருக்கும் வெண்ணையாம், நெய்யலைச்சல் நானகந்தை*
*பொய்யுறக்கக் கண்விழித்தார் பால்....(292)*

*[இதுகாறும் தான் 'குரு' என்று எண்ணி அடைந்தவரிடம், மத்தைக் கொண்டு தயிர் கடைந்து வெண்ணெய் எடுத்தல்போல் கேள்விகள் கேட்டே இறுதியில் ஞானம் பெற்றுவிடலாம் என்று எண்ணிய பால் பிரண்டன், பகவான் நோக்கியவுடன் 'நான்' என்னும் அகந்தை உணர்வுடன் இதுவரை அஞ்ஞான உறக்கத்தில் இருந்த பிரண்டன் உள்ளங்கை வெண்ணெய் போன்ற ஞானம் தன்னிடத்திலேயே முகிழ்ப்பதைக் கண்டுகொண்டார்.]*

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### V.S. மணி அண்ணா 'சதாபிஷேகம்'

*மகாபாரத இதிகாசத்தில் வரும் நிகழ்ச்சி இது: ஒருமுறை தருமபுத்திரர் செய்த ராஜசூய யாகத்தைக் காண்பதற்காகச் சனகாதி முனிவர்கள் போயிருந்தார்களாம். அவர்கள் போனதற்கான காரணம், தருமபுத்திரரின் ராஜசூய யாகத்திற்கு வாசுதேவர் வருவார்.*

*அவ்வாறு வந்தால், அவரை வணங்கலாம் என்பதுதான் அவர்களின் ஆசையாகும். அவர்கள் எதிர்பார்த்தபடி வந்த வாசுதேவரோ, ஒரு காரியத்தைச் செய்தார். ராஜசூய யாகத்தில் கலந்து சிறப்பிக்க வந்திருந்த சில முதியவர்களை வாசுதேவர் பாத நமஸ்காரம் செய்தார்.*

*வாசுதேவரை வணங்குவதற்காகக் காத்திருந்த சனகாதிகளுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. அதனால் வாசுதேவரிடமே சென்று, "இது என்ன? நாங்களெல்லாம் உங்களை வணங்கக் காத்திருக்கிறோம். ஏன் உலகமே உங்களைத்தான் வணங்குகிறது. அத்தகைய நீங்களோ, வேறு யாரையோ நமஸ்கரிக்கிறீர்களே!" என்று பரமாத்மாவாகிய கண்ணபிரானிடமே கேட்டனர்.*

*பகவான் சொன்ன பதிலோ, சனகாதிகளுக்கு மேலும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. "நான் ஆறு முக்கியமானவர்களை வணங்குகிறேன். அவர்கள் வணங்கத் தக்கவர்கள். என்னால் வணங்கத்தக்கவர்கள் என்றால், அவர்கள் ஆறு பேரும் எப்பேர்ப்பட்டவர்கள்" என்று எண்ணிப் பாருங்கள் என்றார்.*

*"அவர்கள் யார்?" என்று கேட்க, பகவான் கூறினார்: "தினசரி அன்னம் பாலிப்பவன், வாலிப வயதிலேயே யாகம் செய்பவன், விரதத்தை ஒரு நாள், இரு நாள் அல்ல,*

*மாதக்கணக்கில், வருடக்கணக்கில் மேற்கொள்பவன், கற்புக்கரசியாக வாழ்கிற பெண்கள், பிரம்மத்தை அறிந்த ஞானிகள். இந்த ஐவர்களை மட்டுமல்ல, ஆறாவதாகவும் ஒருவர் இருக்கிறார். அவர்தான் ஆயிரம்பிறை கண்ட பெரியவர்."*

*கிருஷ்ண பகவானை உயிர்கள் அனைத்தும் நமஸ்கரிக்கின்றன. அவரோ சதாபிஷேகம் செய்யப்படும் சான்றோரை வணங்குகிறார் என்றால், ஆயிரம்பிறை காண்பவருக்கு எத்தனைப் பெரிய மதிப்பும், மரியாதையும் உள்ளது என்பதை நித்யசூரிகளான சனகாதிகளே புரிந்துகொள்ளும்படி கூறினார்.*

*இத்தகைய சிறப்பு மிக்க சதாபிஷேக விழா கடந்த மாதம் பிப்ரவரி 22-ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று ஆச்ரம தலைவர் வே.சு. ரமணன் அவர்களின் இளைய சகோதரர் திரு. வி. சுப்ரமணியன் (மணி அண்ணா) மற்றும் ரமணி சுப்ரமணியன் தம்பதியருக்கு ஸ்ரீ ரமணாச்ரம வேதபாடசாலையில் சிறப்பாக நடைபெற்றது. ஆச்ரம அன்பர்கள் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்ட இவ்விழாவானது எளிய முறையில் நடைபெற்றது.*



*வேதபாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வேத பண்டிதர்கள் கிரமமாக கணபதி, லக்ஷ்மி, ம்ருத்யஞ்ஜய, ஆயுஷ் மற்றும் தன்வந்திரி*

*ஹோமங்களைச் செய்து தம்பதியினருக்கு கலசாபிஷேகம் செய்வித்தனர்.*

*மாங்கல்ய தாரணத்துடன் இவ்விழா இனிதே நிறைவுற்றது.*

## திருமதி. சுசீலா ரமணன் அவர்களின் 80-ஆவது பிறந்தநாள் விழா

*ஆச்ரம தலைவர் திரு. வே.சு. ரமணன் அவர்களின் துணைவியார் சுசீலா மன்னி என்று அன்புடன் அனைவராலும்*



*அழைக்கப்படும் திருமதி. சுசீலா ரமணன் அவர்களின் 80-ஆவது பிறந்தநாள் விழா ஆச்ரமத்தில் மார்ச் 27-ஆம் தேதியன்று மிகவும் எளிய முறையில் கொண்டாடப்பட்டது. குடும்பத்தினரும் ரமண அன்பர்களும் கலந்துகொண்டனர்.*

## ஸ்ரீவித்யா ஹோமம்

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில், ஸ்ரீ வித்யா ஹோமம் கடந்த வருடங்களைப் போலவே இவ்வாண்டும் வெள்ளிக்கிழமை 22-3-2019 அன்று, காலை 7.00 மணி முதல் துவங்கி மாலை*

*4.00 மணியளவில் பூர்ணாஹுதியுடன் நிறைவு பெற்றது. கலச தீர்த்தங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மாத்ருபூதேச்வரர் சந்நிதியில் அபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பக்தர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு திரிபுரசுந்தரி அம்பாளின் அருளைப் பெற்றனர்.*

## 69-ஆவது ஆராதனை விழா செய்திகள்

### 2-5-2019, வியாழக்கிழமை

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஆராதனை விழாவை முன்னிட்டு ஸ்ரீரமணேஸ்வர மஹாலிங்கத்திற்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள், வேதபாராயணங்கள் மற்றும் சிறப்பு அலங்காரங்களுடன் பூஜை நடைபெற உள்ளது. விழாவினை முன்னிட்டு சிறப்பு விருந்தும், ரமண பக்தி இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.*

### ஸ்ரீரமணாலயம், குரோம்பேட்டை

*காலை மங்கள இசை, வேதபாராயணம், அஷ்டோத்திர பூஜைகளுடன் விழா தொடங்கும். காலை 9.30 மணியளவில் 'திருவாசக செந்நாவலர்' சத்குருநாத ஓதுவார் அவர்களின் 'ரமண சந்நிதிமுறை' இசைநிகழ்ச்சி நடைபெற உள்ளது. பங்குபெறும் பக்தகோடிகள் அனைவருக்கும் மதியம் 11.30 மணியளவில் சிறப்பு விருந்து பிரசாதமாக வழங்கப்படும்.*

### முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*காலை சிறப்புப் பூஜையுடன் துவங்கி, ராமநாதபுரம் மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவ, மாணவியர் பங்குபெறும் 'அக்ஷரமணமாலை' பாராயணம் மற்றும் பக்தி இசைநிகழ்ச்சி நடைபெற உள்ளது. சிறப்புப் பிரசாதமாக மதிய உணவு கலந்துகொள்ளும் அனைவருக்கும் வழங்கப்படும்.*

*மேலும் மதுரை ரமண மந்திரம், திருச்சுழி சுந்தர மந்திரம் மற்றும் சூளைமேடு ரமண சத்சங்கம் போன்ற மையங்களிலும் ஆராதனை விழா 2-5-2019 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.*

# மஹாபூஜை - அன்னை அழகம்மையார் ஆராதனை - விழா செய்திகள்

## ஸ்ரீ ரமணாச்ரமம்

*பகவானது தாயார் அன்னை அழகம்மையாரின் மஹாபூஜை 28 மே செவ்வாய்க்கிழமையன்று சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. மாத்ருபூதேஸ்வர மஹாலிங்கத்திற்கும், ரமணேஸ்வர மஹாலிங்கத்திற்கும் சிறப்பு அபிஷேக, அலங்காரங்கள், விசேஷ பூஜைகள் நடைபெறும். கலந்து கொள்ளும் அன்பர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்னதான பிரசாதம் வழங்கப்பெறும்.*

## ஸ்ரீ ரமணாலயம், குரோம்பேட்டை

*ஸ்ரீமாத்ருபூதேஸ்வரர் மஹாபூஜை, சென்னை குரோம்பேட்டை ரமணாலயத்தில் மே 28ஆம் தேதியன்று கொண்டாடப்பட உள்ளது. காலை 8 மணியளவில் ஸ்ரீமாத்ருபூதேஸ்வர அஷ்டோத்ர பூஜையுடன் துவங்கி பின்னர் 'திருவாசக' முற்றோதல் மாலைவரை நடைபெறும். மதியம் சிறப்பு அன்னம் பாலித்தல் நடைபெறும்.*

## ஸ்ரீ M. வெங்கட்ராமன்



*ஆச்ரம 'மாப்பிள்ளை' என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. M. வெங்கட்ராமன் அவர்கள் கடந்த மார்ச் 9-ஆம் தேதியன்று அருணாசல ரமண பதமடைந்தார்.*

*1930-ஆம் ஆண்டு பிறந்த இவர் சுவாமி ரமணானந்தா (ஆச்ரம முன்னாள் தலைவர் திரு. T.N. வெங்கடராமன்)*

*அவர்களின் மூத்த மகள் திருமதி. லக்ஷ்மி அவர்களின் கணவராவார்.*

*ஆச்ரம வெளியீடான The Technique of Maha Yoga என்ற நூலின் ஆசிரியர் நாராயண ஐயர் திரு. M. வெங்கடராமன் அவர்களின் பாட்டனார் ஆவார்.*

*அருணாசலத்தில் தங்கி பகவான் முன்னிலையில் தியானத்தில் ஈடுபடுவதை வழக்கமாக கொண்டவர் நாராயண ஐயர். எட்டு வயது நிரம்பிய சிறுவனாக இருந்தபோது வெங்கட்ராமன் தனது தாத்தா நாராயண ஐயருடன் பகவானது தரிசனத்திற்கு வந்து 'பகவானது கண்ணோக்கத்தைப் பெற்ற பாக்கியசாலி' என்று பின்னாளில் இவர் குறிப்பிட்டுள்ளார்.*

*பகவானால் 'நம்ம லக்ஷ்மி' என்று அழைக்கப்படும் ஆச்ரம சர்வாதிகாரியின் புதல்வியுடன் திரு. எம். வெங்கட்ராமன் அவர்களுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டு ஆச்ரமத்திலேயே திருமணம் நிகழ்ந்தது.*

*தமிழக அரசு போக்குவரத்துத் துறையில் உயர் பதவிகளை வகித்த இவர் தமது பணி ஓய்விற்குப் பிறகு ஆலய தரிசனங்களில் ஆர்வம் காட்டி வந்தார். பகவான் ரமண மகரிஷி, காஞ்சி பெரியவர் மற்றும் புட்டபர்த்தி சாய்பாபா ஆகியோரைத் தரிசிக்கும் பேறு பெற்றவர் இவர்.*

*தமது 90 ஆவது வயதில் பகவானது மலரடியில் சேர்ந்தார்.*

*இவருக்கு மனைவி லக்ஷ்மியும் இரண்டு மகன்களும் உள்ளனர்.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2019

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *மே* | 18 | *சனி* | *அதிகாலை* 4.32 | 19 | *ஞாயிறு* | *அதிகாலை* 3.40 |
| *ஜூன்* | 16 | *ஞாயிறு* | *மதியம்* 3.10 | 17 | *திங்கள்* | *மதியம்* 3.00 |
| *ஜூலை* | 16 | *செவ்வாய்* | *அதிகாலை* 3.00 | 17 | *புதன்* | *அதிகாலை* 3.00 |
| *ஆகஸ்ட்* | 14 | *புதன்* | *மாலை* 4.30 | 15 | *வியாழன்* | *மாலை* 6.10 |

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை,*** *ரமணாலயம்* | ........ | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | ........ | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | ........ | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ........ | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | ........ | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | ...... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | ....... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | ........ | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | ......... | 9486576687 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

SEMINAR ON THE LIFE & TEACHINGS OF

# Bhagavan Sri Ramana Maharshi

பேராசிரியர் திரு. சுவாமிநாதன் அருணாசலத்தில் ஒன்றிய
வெள்ளிவிழா ஆண்டு

## On Sunday, 5th May 2019

*at Tattvaloka Auditorium 76, Eldams Road, Teynampet,*
*Chennai - 18. Tel : 2432 8124 / 5 / 6*

## PROGRAMME

**Sunday : 05.05.2019**

| | | |
|---|---|---|
| 2.45 - 3.05 p.m. | : | Veda Parayanam |
| 3.05 - 3.15p.m. | : | Welcome Address by **Smt Meera Balachandran**, Trustee Ramana Kendra |
| Compering | : | **Smt Vasantha Raghavan** |
| 3.15 - 3.45 p.m. | : | "**Shri. Krishna,** Additional Editor, Dinakaran ", "அருணை எனும் அருள் மழை" |
| 3.45 - 4.15 p.m. | : | **Dr. S. Rammohan,** Editor, Ramanodhayam "பகவானுக்கு ஒரு சேக்கிழார்"- பேராசிரியர் திரு. சுவாமிநாதன் |
| 4.15 - 5.00 p.m | : | **Dr. Sampjath Kumar,** Member - Indian Council of Philosophical Research "பாரதியை பற்றி தீப்பொறியாம் பகவான்" |
| 5.00 - 5.15 p.m. | : | Coffee Break. |
| 5.15 - 6.10 p.m. | : | **Shri Thiruppur Krishnan,** Editor, Amudha Surabhi "பகவானும் சமகால ஞானியரும்" |
| 6.15 - 7.15 p.m | : | "ரமண இன்னிசை" Smt. Gayathri Sudharshan |

*Mangalam*

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

